Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror


www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 02, 2024

வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 02, 2024 | ஒளி: 10 கதிர் 020 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

பெரும்பான்மை வேட்பாளர்களிடையே

# “50% கஷ்டம்”



**போரின் காரணமாக தங்களை வளர்த்துக் கொண்டார்கள். இவை எல்லாம் மக்களுக்கு தெரியும்**

**ரணிலுக்கு 92 பேர் ஆதரவு என்றால் மற்றையவர்கள் இதே மாதிரியான மனோ நிலையில் இருப்பார்கள் என நம்புகின்றேன்**

*எஸ்.நிதர்ஷன்*

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பெரும்பான்மையின வேட்பாளர்களில் ஐம்பது சதவீத வாக்கு பெறக் கூடியவர்கள் என்று எவரும் இல்லை. பிரதான வேட்பாளர்கள் ஐம்பது சதவீத வாக்குகளுக்கும் குறைவாகத் தான் வாக்குகளை பெறுவார்கள் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இன்னும் சில வேட்பாளர்கள் தனித்து களமிறங்குவதாக கூறினாலும் நிச்சயம் அவர்கள் ரணிலை ஆதரிப்பார்கள். அவ்வாறு செய்யாவிடின், இன்னொரு தேர்தல் வந்தால் ராஜபக்ஷக்களின் மொட்டு கட்சி அழிந்துவிடும் என்றார். தொடர்ச்சி P2



# ரணிலுக்கே பிரதமர் தினேஷ் ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், சுயேட்சையாக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன தீர்மானித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய செயற்குழு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், வியாழக்கிழமை (01) கூடியது. இதன்போதே ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஆதரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் தினேஷ் குணவர்தன, தனது ஆதரவை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்குவாரா? அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவாரா? என்பது தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.



# பணவீக்கம் உயர்ந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த ஜூன் மாதம் 1.7 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஜூலை மாதம் 2.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் மாதம் 1.4 பதிவான உணவுப்பணவீக்கம் ஜூலையில் 1.5 சதவீதமாகவும்,ஜூன் மாதம் 1.8 சதவீதமாகப் பதிவான உணவல்லாப் பணவீக்கம் ஜூலையில் 2.8 சதவீதமாகவும் உயர்வடைந்தன. தொடர்ச்சி P2

# வாள்வெட்டில் துண்டான கையை விட்டுவிட்டு ஓட்டம்



மாரவில , பஹல வலஹாபிட்டிய பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின் போது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் 23 வயதுடைய இளைஞன் ஒருவனின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது.

கையை இழந்து காயமடைந்த நபர் அந்தக் கையை சம்பவ இடத்தில் விட்டு தப்பியோடியுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர் .

சில காலமாக நிலவி வந்த முரண்பாடு காரணமாக இந்த வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது . தொடர்ச்சி P2



# இலங்கை கடற்படை தாக்குதலில் விசைப்படகு மூழ்கி மீனவர் உயிரிழப்பு

## ராமேசுவரத்தில் உறவினர்கள் மறியல்

இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் தமிழக மீனவர்களின் ஒரு விசைப்படகு மூழ்கியது. இதில் இரண்டு மீனவர்களை உயிரிடனும், ஒரு மீனவரின் உடலையும் இலங்கை கடற்படை மீட்டுள்ளது. மாயமான இன்னொரு மீனவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 400 விசைப்படகுகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் புதன்கிழமை (31) கடலுக்குச் சென்றனர். தொடர்ச்சி P2

# “தான் குற்றமற்றவர்”



குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் தான் குற்றமற்றவர் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே கொழும்பு நீதவான் நீதமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவருக்கு எதிராக ஏழு குற்றச்சாட்டுகளை சுமத்தி, தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் குற்றப்பத்திரிகை, வியாழக்கிழமை (01) வாசித்து காட்டப்பட்டது. இந்நிலையில், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

காலாவதியான விசாவுடன் இலங்கையில் தங்கியிருந்தமை மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் போலியான தகவல்களை வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் டயானா கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியை சந்தித்தார் குகதாசன் எம்.பி

*அ . அச்சுதன்*



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, புதன்கிழமை (31) சந்தித்து கலந்துரையாடினார்.

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் பல்வேறு தேவைகள் மற்றும் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடினார் என அறியமுடிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரான மறைந்த இரா.சம்பந்தனின் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “இனவாதத்தை எதிர்க்கும் வேட்பாளருக்கே வாக்கு”

*எஸ்.கீதபொன்கலன்*

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும் நபரே ஜனாதிபதியாக வர வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்களின் நிரந்தர அரசியல் தீர்வை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட 100 நாட்கள் செயல்முனைவின் இரண்டாம் வருட பூர்த்தியை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

# கட்டுப்பணம் செலுத்தினார்



முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ, தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் வியாழக்கிழமை (01) கட்டுப்பணம் ராஜகிரிய பகுதியில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவில் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை 07 பேர் கட்டுப்பணம் செலுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கஞ்சிபானி இம்ரானும் லொக்கு பட்டியும் கைது

‘கிளப் வசந்த’ என்று அழைக்கப்பட்ட கோடீஸ்வர வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா கொலைக்கு மூளையாக செயற்பட்டனர் என கருதப்படும் பாதாள உலக தலைவர் கஞ்சிபானி இம்ரான் ,பாதாள உலக உறுப்பினர் லொக்கு பட்டி நாமத்த ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கஞ்சிபானி இம்ரான் பெலாரஸில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், லொக்கு பட்டி துபாயில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலை பாதாள உலகக் குழுத் தலைவர் கஞ்சிபானி இம்ரானால் திட்டமிடப்பட்டதாகவும், தொடர்ச்சி P2

# “எஞ்சிய மொட்டுக்கள் ரணிலிடம் வரும்”



தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் எஞ்சியிருக்கும் சிலரில் இருந்து நாட்டை நேசிக்கும் மற்றொரு குழு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு, அடுத்த சில நாட்களில் ஆதரவை தெரிவிப்பார்கள் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியில் உள்ள பெரும்பான்மையான பாராளுமன்ற தொடர்ச்சி P2

# ஜனாதிபதி தேர்தலில் ஆசிரியர் போட்டி?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இந்த தேர்தலில் ஆசிரியர் சமுகத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டியிட உள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியில் பயின்ற இவர், நாட்டிலுள்ள பல பாடசாலைகளில் கற்பித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியுள்ளார் என்றும். கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளார் என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடுவதாயின், பாடசாலையில் விடுமுறை பெறவேண்டும். அதற்காக விண்ணப்பித்து, அனுமதியையயும் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “50% கஷ்டம்”

யாழ்ப்பாணத்தில், புதன்கிழமை (31) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை பொறுத்தவரையில் இப்பொழுது எனக்கு ஒரு கரிசனை இருக்கிறது. அதாவது தேர்தலின் பின்னர் கலவரங்கள. வெடிக்க கூடும் என்ற நிலை இருக்கிறது என்றார்.

இந்த தேர்தலில் பல பேர் போட்டியிடுவதாக கூறினாலும் ரணில், சஜித், அனுர என்ற மூன்று பேர் தான் முக்கியமானவர்கள். இந்த மூவருக்கும் இடையில் என்ன மாதிரியான போட்டி நடக்க போகிறது என்பதை அவதானிக்க வேண்டும்.

இந்த தேர்தலில் மொட்டு கட்சியின் பங்கு என்னவென்று கேட்டீர்களானால் அந்தக் கட்சியில் இருப்பவர்கள் திரும்பவும் ஒரு தேர்தல் வந்தால் முழுமையாக அழிக்கப்பட்டு விடுவார்கள் என்று கருதுகிறேன்.

அதாவது தெற்கில் இருக்கும் அவர்களுடைய ஆசனங்கள் எல்லாம் ஜேவிபி கட்சிக்கு போய்விடும் என்பது என்னுடைய கருத்து. அந்தளவிற்கு இந்த நாட்டிற்கு அவர்கள் செய்த துரோகம் மக்கள் மனதில் இருக்கிறது.

குறிப்பாக இந்த நாட்டை சூறையாடி இருக்கிறார்கள், போர் போர் என்று போரின் காரணமாக தங்களை வளர்த்துக் கொண்டார்கள். இவை எல்லாம் மக்களுக்கு இப்போது நன்றாக தெரியும்.

ஆகவே, எந்த விதத்தில் தற்போது இருக்கும் நாட்டின் ஸ்திரத்தன்மையை இல்லாமல் பண்ணுவதற்கு அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஆனால், தங்களுடைய கட்சியின் தனித்துவத்தை வெளிக் கொணர வேண்டும் என்ற முறையில் ஏதோ சில சில பேச்சுக்கள் எல்லாம் பேசி வருகின்றனர். ஆனால் அவர்கள் கட்டாயம் ரணிலுக்கு ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்பது என்னுடைய கருத்தாக உள்ளது.

இப்போது மொட்டு கட்சியில் உள்ள பலர் ரணிலுக்கு ஆதரவை தெரிவித்துள்ள அதே நேரத்தில் தங்களுடைய தனித்துவத்தை எடுத்து கட்டி வேறொரு வேட்பாளரை போடக்கூடும். ஆனால் அவர்களில் 92 பேர் ரணிலுக்கு ஆதரவு என்றால் மற்றையவர்கள் இதே மாதிரியான மனோ நிலையில் இருப்பார்கள் என்று தான் நான் நம்புகின்றேன்.

எனினும், முழுமையாக ரணிலிடம் தாங்கள் சரண்டைந்து விட்டோம் என்று காட்டுவது அவர்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் இறந்து கொண்ட போறவன் எப்படியாவது வைக்கோலை பிடிக்கிற மாதிரி ஏதாவது ஒன்றை சொல்லி தாங்கள் இன்னும் மக்கள் ஆதரவுடன் இருக்கிறோம் என்று காட்டுவதற்கு பலதும் பேசுவார்கள்.

இப்போது அரசாங்கத்தோடு சேர்ந்திருப்பவர்கள் அதிகமாக ரணிலுக்கு ஆதரவை வழங்குவார்கள் என்று நம்புகிறேன். ஏனெனில் ராஜபக்ஷர்களோடு இருப்பவர்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியே வந்துவிட்டால் அதன் பின்னர் பாராளுமன்றம் போக கூடிய நிலைமை பலருக்கு இல்லை என்பது என்னுடைய கருத்தாகும் என மேலும் தெரிவித்தார்.

# “இனவாதத்தை எதிர்க்கும் வேட்பாளருக்கே வாக்கு”

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி, சுழற்சி முறையிலான 100 நாட்கள் செயல்முனைவினை ஆரம்பித்து, 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டிருந்தது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் நாம் எதிர்கொண்டு வரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம். ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்குள் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை நாம் திடமாக வலியுறுத்தி நிற்கிறோம்.

இலங்கையில் நாம் சிறுபான்மையினர் அல்ல. இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இறைமையுள்ள மக்கள் சமூகத்தினராவோம். எமது சுயநிர்ணய உரிமை, இறைமை என்பதை சமஷ்டி முறைமையின் மூலம் உறுதி செய்து கொள்ள திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினர் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றனர். எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயல்படுவோம். அதற்காக, அனைவரும் ஜனநாயக வழி நின்று செயல்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போகும் வேட்பாளர்களுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கிறோம். தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். சமஷ்டிக் கொள்கையை முன்னெடுக்கும் நபரே ஜனாதிபதியாக வர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களான எமது மொழி, மத, அரசியல், பொருளாதார உரிமைகளை பாதுகாத்து முன்னெடுக்கும், இனவாதத்தை எதிர்க்கும் வேட்பாளருக்கே தமிழ் (வடக்கு கிழக்கு), முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “எஞ்சிய மொட்டுக்கள் ரணிலிடம் வரும்”

உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க எடுத்த இந்த தீர்மானம் கட்சியையும் நாட்டையும் பற்றி சிந்தித்து எடுக்கப்பட்ட தீர்மானம் என்றார்.

“ஒன்றிணைந்து வெல்வோம்" என்ற தொனிப்பொருளில், பம்பலப்பிட்டி லொரிஸ் மாவத்தையில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி தேர்தல் ஊடக மையத்தில் புதன்கிழமை (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாங்கள் பொதுஜன பெரமுன கட்சியை இன்னும் நேசிக்கிறோம். எங்கள் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்த நாங்கள் இன்னும் தயாராக உள்ளோம். இந்த நாடு நெருக்கடியை சந்தித்தது. அப்போது இந்த நாடு இரத்தக் கடலாகவும், மயானமாகவும் மாறிவிட்டது. அப்போது நாட்டை காப்பாற்றியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த நாங்கள், அவருடன் இணைந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கினோம். அரசியல் ரீதியாக, நாம் இன்னும் முன்னாள் தேசிய அமைப்பாளரும் கட்சியின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷவை நேசிக்கின்றோம். ஒவ்வொரு தருணத்திலும் மொட்டுக் கட்சியை மதித்து நேசித்து எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுப்போம்.எனினும், இந்த தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்றார்.

# “புரிந்து கொண்ட தலைவர் ரணில்”

இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்போம் என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு மிலான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள மக்களின் உள்ளுணர்வை புரிந்து கொண்ட தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதன் காரணமாகவே நாம் அந்த முடிவை எடுத்தோம் என அவர் வலியுறுத்துகிறார்.

ஒன்றிணைந்து வெல்வோம் என்ற தொனிப்பொருளில் வியாழக்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது பம்பலப்பிட்டி லொரிஸ் மாவத்தையில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி தேர்தல் ஊடக மையத்தில் நடைபெற்றது.

“தற்போது, இந்த நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளைத் தீர்த்து, இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரேயொரு தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே பார்க்க முடியும். ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குழு என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த வேண்டும் என்று நாங்கள் கலந்துரையாடினோம். இளம் அரசியல்வாதிகளாகிய நாங்கள் நாட்டைப் பற்றி சிந்தித்து இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தோம்.

இந்த நாடு பெரும் நெருக்கடியில் சிக்கியபோது அனைத்து தலைவர்களும் ஓடிவிட்டனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சவாலை ஏற்றுக்கொண்டார். அவர் சவாலை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, குறுகிய காலத்தில் இந்த நாட்டை மீட்டெடுத்தார். எதிர்காலத்தில் இந்த நாட்டில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் மக்களுக்கு நல்ல சம்பளத்துடனான வேலை, சமூகம் ஆகிய சூழலை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அதற்கான

> **தனிக் கூட்டணி அமைக்கும் எண்ணம் எங்களிடம் இல்லை. SLFP அல்லது UNP உடன் கூட்டு சேரமாட்டோம். ரணில் உயரமான, வெள்ளை, கொழுத்த டை-கோட் அணிந்திருப்பதால் அவருடன் நாங்கள் சேரவில்லை**

வேலைத்திட்டத்தை அமுல்படுத்தக்கூடிய தலைவராகவே நாம் அவரைப் பார்க்கின்றோம்.

ஈரான், ஈராக்கில் உள்ள பிரச்சினைகளால், நம்மைப் போன்ற சிறிய நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது. நமது நாட்டிற்கு அன்னியச் செலாவணியை வழங்கும் பெரும்பாலான தொழிலாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளனர். இந்நாடுகளில் இருந்தே அதிகளவு எரிபொருள் இந்நாட்டிற்கு வழங்கப்படுகின்றது.மீண்டும் ஒரு பிரச்சினை வந்தால், அதற்கு நிர்வாகத்தை சரியான வழியில் வழிநடத்த பக்குவமான தலைவர் தேவை. அதற்கான திறமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே உள்ளது.

பொதுஜன பெரமுனவின் அரசியலமைப்பில் நாடு முதலிடம் வகிக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்பொழுதும் எங்களிடம் கூறுவது முதலில், இரண்டாவதாக, மூன்றாவதாக நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்பதுதான். அந்த இடத்தில் இருந்துதான் இந்தப் பணியைச் செய்து வருகிறோம். இந்த நாட்டு மக்கள் அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஒரு நாட்டை வழிநடத்தும் போது, ஒரு தலைவருக்கு பொருளாதார அறிவு மட்டும் இருந்தால் போதாது. அதற்கு அரசியல், சமூக, பாதுகாப்பு அறிவு கூட இருக்க வேண்டும். அரசியல் நிலைப்பாடு செய்ய முடியாது என்றால். பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு எவ்வளவு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமல்ல. இது மூன்று சக்கர வாகனத்தின் மூன்று சக்கரங்கள் போன்றது. ஒன்றை தவறவிட்டால் ஓட முடியாது. நாட்டின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு கோட்டாபய ராஜபக்சவை நியமித்தோம். அப்போது அவருக்கு ராணுவ பலம் இருந்தாலும் பொருளாதாரத்தை சரியாக கையாள முடியவில்லை. அவரது அரசாங்கம் வீழ்ந்தது. அப்போது இந்த நாட்டின் பொருளாதாரம், அரசியல் இரண்டுமே குழப்பமான நிலையில் இருந்தது. இவ்வாறானதொரு காலப்பகுதியில்தான் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். அரசியல் ரீதியாக நாங்கள் மிகவும் சிதறிப் போனோம். ஒரு நிகழ்ச்சிக்காக கிராமத்திற்கு செல்ல முடியவில்லை. அப்போது நாட்டில் பயங்கரம் நிலவியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடு வீதியில் கொல்லப்பட்டனர். அரசியல் குழப்ப நிலையை நீக்கி இன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களை உருவாக்கி இருக்கிறார். பொருளாதாரத்திற்கு சரியான திட்டங்களை வழங்கி பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அவரால் மட்டுமே அதை சரியாக நிர்வகிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எமது இலட்சியத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நாம் ஒருபோதும் கைவிடவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டை யுத்தத்திலிருந்து காப்பாற்றினார். யுத்தத்துக்கு அப்பால் இந்த நாட்டை அபிவிருத்தி செய்தார். அவர் வலிமையான தலைவர்.

நாங்கள் எங்கள் கால்களை இரண்டு பக்கமும் வைக்கவில்லை. ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் நினைத்து ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு உதவுகிறோம்.நாங்கள் மொட்டை விடவில்லை. ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது கட்சியின் முடிவு. அப்போது நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்ட போது இலங்கை சுதந்திரக் கட்சி உடைந்து மைத்திரிபால சிறிசேன அதனை விட்டு வெளியேறி சிறிசேனவும் அவரது தனியான குழுவும் சுயாதீனமாக செயற்பட்டன. அதே போன்ற நிலைதான் இன்றைய நிலையும்.

தனிக் கூட்டணி அமைக்கும் எண்ணம் எங்களிடம் இல்லை. SLFP அல்லது UNP உடன் கூட்டு சேரமாட்டோம். ரணில் உயரமான, வெள்ளை, கொழுத்த டை-கோட் அணிந்திருப்பதால் அவருடன் நாங்கள் சேரவில்லை. ஏனெனில் அது இந்நாட்டின் நிலைமையை ஸ்திரப்படுத்த முடிந்ததால் சேர்ந்தோம் என்றார்.

# பணவீக்கம் உயர்ந்தது

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் ஜூலையில் 0.44 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 0.03 சதவீத அதிகரிப்பும், உணவல்லாப்பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.47 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த ஜூலை மாதம் 0.44 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைந்து, நடுத்தர காலத்தில் அம்மட்டத்துக்கு மேல் பதிவாகும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

# வாள்வெட்டில் துண்டான கையை விட்டுவிட்டு ஓட்டம்

காயமடைந்த இளைஞன், மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் , தாக்குதலை மேற்கொண்ட நபர், கீழ் வலஹாபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த, இரண்டு பிள்ளைகளின் தந்தையான் 35 வயதுடையவர் என தகவல் கிடைத்துள்ளது என்றும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் .

# கஞ்சிபானி இம்ரானும் லொக்கு பட்டியும் கைது

டுபாயைச் சேர்ந்த பாதாள உலகக் குழு உறுப்பினர் லொகு பட்டி என்பவரால் நடத்தப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆதாரங்களின்படி, பிரான்சில் பதுங்கியிருந்த கஞ்சிபானி இம்ரான், பெலாரஸுக்குத் தப்பிச் செல்ல முயன்றதாகவும், பிரெஞ்சு எல்லையில் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கிளப் தலைவர் வசந்தவை கொலை செய்வதற்காக பாதாள உலக தலைவர் கஞ்சிபானி இம்ரான் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்துள்ளதாக புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை கடற்படை...

அவர்கள் நெடுந்தீவு கடற்பகுதியில் அன்றிரவு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாகச் சொல்லி மீனவர்களை கைது செய்ய தங்களது கடற்படை ரோந்து கப்பலில் துரத்தியுள்ளனர். அப்போது கார்த்திக்கேயன் என்பவரின் விசைப்படகில் கடுமையாக மோதியதில், அந்தப் படகு நடுக்கடலில் மூழ்கியது என இந்திய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் இந்த தாக்குதல் சம்பவத்தால் விசைப்படகில் இருந்த ஒரு மீனவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு மீனவர் மாயமாகி உள்ளார். இருவர் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கரைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து, இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ராமேசுவரம் தாலுகா அலுவலகம் எதிரே மதுரை தேசிய நெடுங்சாலையில் மீனவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சாலை மறியலில் ஈடுபட்டுள்ள மீனவர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும், மாயமான மீனவரை சர்வதேச கடல் எல்லை பகுதியில் தேடும் பணியில் உச்சிப்புளியில் உள்ள ஐஎன்எஸ் பருந்து கடற்படை தளத்தில் இருந்து ஒரு ஹெலிகாப்டரும், மண்டபம் இந்திய கடலோர காவல் முகாமிற்குச் சொந்தமான ரோந்து கப்பல் ஒன்றும் ஈடுபட்டுள்ளன.

முன்னதாக கடந்த ஜூன் 25 அன்று இலங்கை கடற்படையினர் நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த ஆனந்தன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகை கைப்பற்றி, படகிலிருந்த 10 பேரை கைது செய்தனர். இந்த கைது நடவடிக்கையின் போது, இலங்கை ரோந்துப் படகிலிருந்த இலங்கை கடற்படை வீரர் ரத் நாயக்க, கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகிலிருந்து தவறி விழுந்தார். அவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும்போது உயிரிழந்தார்.

இதனால் சர்வதேச கடல் எல்லையில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருப்பதற்காக இந்திய கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என மீன்வளத்துறையினர் வலியுறுத்தி வந்த நிலையில் இந்த தாக்குல் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “நன்கொடைகளை வைப்பிலிட வேண்டாம்”

காசா சிறுவர் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் 2024 ஜூலை 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது என ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

ஆகையால், அதற்கான நன்கொடைகளை இனியும் வைப்பிலிட வேண்டாம் என பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2024 ஜூலை 31 ஆம் திகதிக்கு பின்னர் எவரேனும் ஜனாதிபதி செயலகத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்திருக்கும் பட்சத்தில் அந்த நிதி சமூக நிவாரணச் செயற்பாடுகளுக்காக ஜனாதிபதி நிதியத்திடம் கையளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.


# “ஏமாற வேண்டாம்”

## சுகாதார அமைச்சு விடுத்துள்ள அவசர கோரிக்கை

சமூக வலைத்தளங்களில் வெளியாகும் விளம்பரங்கள் தொடர்பில் கடும் அவதானத்தை செலுத்தியுள்ள சுகாதார அமைச்சு, ஏமாற வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. சில நோய்களை உணவின் மூலம் குணப்படுத்த முடியும் என தரவேற்றம் செய்துள்ள விளம்பங்கள் தொடர்பிலேயே சுகாதார அமைச்சு கவனத்தை செலுத்தியுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்யப்படுவதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஆனந்த ஜெயலால் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வைத்தியர் ஆனந்த ஜெயலால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




“பொதுவாக உணவின் முக்கிய எதிர்பார்ப்புகள் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியாகும். நோய்களைக் குணப்படுத்துபவைகளை மருந்துகள் என்கிறோம். உணவால் நோய்களைக் குணப்படுத்த முடியாது. உணவால் நோய்களை குணப்படுத்த முடியும் என்று யாராவது சொன்னால்இ நாட்டின் சட்டப்படிஇ பிரதானமாக உணவு ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும்.

பல்வேறு நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்திஇ உணவு இதய நோய் மற்றும் புற்றுநோய்க்கு நல்லது என்று விளம்பரப்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம்இ குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலம். அந்த விளம்பரங்கள் பெரும்பாலும் தவறாக இருக்கும்.

ஒரு உணவினால் நோயைக் குணப்படுத்த முடியும் என்று விளம்பரப்படுத்துவது பெரும்பாலும் சாத்தியமில்லை. நீங்கள் அவ்வாறு செய்தால்இ முறையான மருத்துவ தரவு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் உணவு ஆணையத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அப்படி இல்லாமல் செய்வது சட்ட விரோதம்” என்றார்.

# புதையல் தோண்டிய 8 பேர் கைது



அனுராதபுரம் விஜேபுர மற்றும் தெளபுகஸ் ஏரி பகுதிகளில் புதையல் தோண்டிய 8 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களும் அனுராதபுரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 23 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும், இவர்கள் பயாகல, கல் உடைந்த ஏரி, அனுராதபுரம், அம்பலாந்தோட்டை மற்றும் டிக்வெல்ல ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ்ஸுடன் தாய்,மகன் கைது

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரிப்பத்தான் சேனை பிரதேசத்தில் ஐஸ் போதை பொருளுடன் தாயும் மகனும் செவ்வாய்க்கிழமை(30) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறக்காமம் விசேட புலனாய்வு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 6 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் குறித்து இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# டொல்பின் சிலை திறப்பு

■ அ . அச்சுதன்

திருகோணமலை நகரத்தை அழகுபடுத்தும் முகமாக திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கு முன்பு உள்ள சுற்றுவட்டத்தில் புதிதாக டொல்பின் சிலை அமைக்கப்பட்டுள்ளது .

இது நகராட்சி மன்ற செயலாளர் தே.ஜெயவிஷ்ட்ணுவின் வேண்டுகோளுக்கு இணங்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் புதன்கிழமை (31) திறந்து வைத்தார். இதன்போது நகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்

# இராதா எம்.பியின் பிறந்த நாள் பரிசு

■ டி.ஷங்கீதன்

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது 72 வது பிறந்த நாளை புதன்கிழமை ( 01) தனது இல்லத்தில் மிகவும் எளிமையாக கொண்டாடினார்.

இதன்போது சில சர்வதேச பாடசாலைகளுக்கு வாசிகசாலைகளுக்கான புத்தகங்களும் அறநெறி மாணவர்களுக்கான புத்தகங்களும் ஒரு சில பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப கல்வியை முன்னெடுக்கும் முகமாக அவர்களுக்கான ஸ்மார்ட் தொலைக்காட்சிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஏதிர்காலத்தில் மலையக பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட மேலும் சில பாடசாலைகளுக்கான தொழில்நுட்ப கல்வியை முன்னெடுக்கும் முகமாக அதற்கான ஸ்மார்ட் தொலைக்காட்சி உட்பட பல பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என இதனை ஏற்பாடு செய்துள்ள முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவருமான ஆர் ராஜாராம் தெரிவிக்கின்றார்.

இந்த திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு இந்தியாவை தலைமையகமாக கொண்டு இயங்கும் வித்யா சக்தி எனும் அமைப்பு பங்களிப்பு செய்து வருவதுடன் .இலங்கையில் அட்சயம் நிதியம் எனும் பெயரில் இயங்கி வருகிறது.இந்த செயற்திட்டத்தின் மூலம் கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஒன்லைன் ஊடாக மாணவர்களுக்கு



மேலதிக வகுப்புக்களை ஏற்பாடு செய்து கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

தற்பொழுது இந்த திட்டமானது வடகிழக்கு பகுதிகளில் சில பாடசாலைகளில் வெற்றிகரமான முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் இத்திட்டத்தின் நடைமுறைபடுத்தி வருகின்ற ஒருங்கிணைப்பாளர்களான இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள டி.நாகராஜன் எஸ். சுப்பிரமணியன் ஆகியோரும் நுவரெலியா கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் வி.சாந்த குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது மலையக மக்கள் முன்னணியின் புதிய இளைஞர் அமைப்பாளர்களுக்கான நியமன கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# அதிகாரியை இடமாற்ற கோரி வேலை நிறுத்தம்



■ பி.கேதீஸ்

தேயிலை கொழுந்துகள் திருடப்பட்டுள்ளதாக கூறி தலவாக்கலை தோட்ட அதிகாரி ஒருவர் தொழிலாளி ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை (30) மாலை தாக்கியுள்ளார் .

இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரியும் , தோட்டத் தொழிலாளர்கள் வியாழக்கிழமை (31) முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் .

தாக்குதலுக்குள்ளான தொழிலாளி , இது தொடர்பில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் அவர் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் .

சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட அதிகாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர் .

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை ட்ரூப் தோட்டத்தில் பறித்த தேயிலை கொழுந்துகளை தலவாக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு அரைப்பதற்கு கொண்டு வருவதுடன் அதன் போது இந்த தொழிலாளர் தேயிலை தூளை திருடினார் என்றக் குற்றச்சாட்டிலேயே தோட்ட அதிகாரியால் தாக்கப்பட்டுள்ளார்.



# கசிப்புடன் ஒருவர் கைது

■ ஏ. எம். கீத்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தோஷபுரம் களப்பு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி மையம் ஒன்று அடையாளம் காணப்பட்டு சுற்றிவளைப்பு மேற்கொண்டதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 25,000 மில்லி லீட்டர் கசிப்பு கைப்பற்றப்பட்டதாகவும், நெய்தல் நகர் பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் .

மேலும்,கைது செய்யப்பட்ட நபருடன் கைப்பற்றப்பட்ட கசப்பையும் வியாழக்கிழமை (01) மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கடேட் அதிகாரிகள் நியமனம்

வானின் பாதுகாவலர்கள் என்றழைப்படும் இலங்கை விமானப்படையானது நாட்டின் பாதுகாப்பை எப்போதும் உறுதி செய்து கொண்டு இருக்கிறது அந்த வகையில் புதிய கடேட் அதிகாரிகள் விமானப்படையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இதன்போது மாணவர் அதிகாரி பாடநெறி (மருத்துவம், சட்டம், சிவில் பொறியியல், தகவல் தொழில்நுட்ப பொறியியல், ஏரோநாட்டிகல் மற்றும் பொது பொறியியல்) ஆகிய துறைகளிலும் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கேடட் அதிகாரி பாடநெறி (மருத்துவம்) துறையிலும் தெரிவான கடேட் அதிகாரிகள் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவர்களினால் புதிய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு தியத்தலாவ விமானப்படை போர் பயிற்சி பாடசாலையில் ஜூலை 29ம் திகதி இடம்பெற்றது. இந்த அதிகாரிகள் நியமன அணிவகுப்புக்கு பொறுப்பதிகாரியாக தியத்தலாவ போர் பயிற்சி பாடசாலையின் கட்டளை அதிகாரியான விங் கமாண்டர் கனிஷ்க ஜயசேகர தலைமை தாங்கினார்.





# நடிகை ரம்பா மீண்டும் யாழில்

தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா மீண்டும் தனது குடும்பத்தினருடன் புதன்கிழமை (31) மதியம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

ரம்பாவின் குடும்பத்தினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்றன தனியார் பல்கலைக்கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காகவும் , ரம்பாவின் கணவரின் பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் குடும்பத்தினருடன் இணைந்து கொண்டாடுவதற்காகவும் அவர் யாழ்ப்பாணம் வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மறைந்த உறுப்பினர்களை

# நினைவுகூர்ந்த பழைய மாணவர் சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின், கொழும்புக் கிளையின் சமூக மற்றும் நலன்புரி உபகுழு, களனி இல, 59/1, வனவாசல வீதியில் உள்ள பரமித முதியோர் இல்ல முதியவர்களுக்கு வெள்ளிக்கிழமை (19) அன்னதானம் வழங்கியது.

இச் சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள், உயிருடன் இல்லாத அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் நிர்வாகக் குழுவால் ஆன்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டது. அத்துடன், தற்போதைய உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளை வேண்டியும் இந்த அன்னதானம் வழங்கப்பட்டது. அன்றைய தினம் பௌத்த மதகுரு ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தர்ம உபதேசத்தை தொடர்ந்து 50 வயோதிபர்களுக்கு தானம் வழங்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் பாலித சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



# மஞ்சளுடன் இருவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி , உச்சமுனை தீவுப் பகுதியில் டிங்கி இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை மஞ்சள், கடற்படையினரால் புதன்கிழமை (31) மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் உச்சமுனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகுகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 17 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 749 கிலோ கிராம் மஞ்சள்



கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 44 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் , சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் டிங்கி இயந்திர படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# உணவுக்கான விளம்பரங்களும் வைத்தியர்களின் ஆலோசனைகளும்

தொற்று நோய்களை விடவும், தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அவற்றுக்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், வாழ்க்கை ஓட்டும், உடல் நலனில் பிரதான பங்கை வகிக்கின்றது. போதியளான ஓய்வு, உடற்பயிற்சி, உணவு பழக்கவழக்கம் ஆகியவற்றை பிரதானமாக கூறலாம்.

தொற்றா நோய்களுடன் தொடர்புடையவர்கள் வைத்தியசாலைக்குச் சென்றால், நடைபயிற்சி, உடற்பயிற்சி மற்றும் தியானம் செய்யுமாறு அறிவுரை கூறுகின்ற வைத்தியர்கள், குளிசைகளையும் வழங்குவர். ஆக, தொற்றா நோய்களை குணப்படுத்த அல்லது கட்டுக்குள் வைத்திருப்பதற்கு வைத்தியர்களின் ஆலோசனையின் பிரகாரம் குளிசைகளை உட்கொள்வது அவசியமாகும்.

தட்பவெப்பநிலைக்கு ஏற்பப் பருவ மாற்றமும், அதற்கேற்ப உடல் மாற்றங்களும் நிகழ்வது இயல்புதான். கோடை காலத்தில் இது போன்ற மாற்றங்கள் அதிகம் ஏற்படுகின்றன. வெப்பநிலை அதிகரிப்பதால் உடலில் பல்வேறு உபாதைகள் உண்டாகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை உணவு முறைகளே. இத்துடன் நமது வாழ்க்கை முறையில் சிற்சில மாற்றங்களைச் செய்தால்போதும். பொதுவாகக் கோடை காலத்தில் சில நோய்கள் மிகவும் தீவிரமடையும். இவற்றை ஆயுர்வேத மருத்துவ முறைகள், சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும்.

கோடை காலத்தில் அதிகரிக்கும் வெப்பநிலையால் உடலில் நீர்ச்சத்து குறையும். இதனால் உடல் வலுவிழக்கும். இந்தத் தட்பவெப்பநிலை மாற்றம் உடலில் வாயு, பித்தம், கப அளவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். அதனால் உடலின் சமநிலை மாறி நோய்கள், உபாதைகள் ஏற்படுகின்றன.

கோடை காலத்தில் சீரான செரிமானமே உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். ஆரோக்கியமான உடலுக்கு முதன்மையானது எனக் கூறப்படுகிறது. வெப்பநிலை அதிகரிக்கும்போது செரிமானச் சக்தி குறையும். இதனால் பல நேரங்களில் மந்தமாக இருக்கும். இதனாலேயே பித்தத்தைச் சமச்சீராக வைத்திருக்க ஆயுர்வேதம் பரிந்துரைக்கிறது. ஓரளவு உணவு, அதிக அளவில் தண்ணீர் அருந்துவதன் மூலம் நீரிழப்பு ஏற்படாமல் பராமரிக்கலாம்.

கோடைகாலத்தில் உடலில் பித்தம் அதிகரிப்பதால், தலைவலி வரலாம். கண் நோய், கண்ணில் எரிச்சல், கண்ணில் நீர் வருவது, கண் உலர்ந்து போதல் போன்ற பிரச்சினைகள் கோடை காலத்தில் ஏற்படுவது சகஜம். இந்நிலையில், சில நோய்களை உணவின் மூலம் குணப்படுத்த முடியும் என சமூக வலைத்தளங்களில் விளம்பரங்கள் வெளியாகின்றன.

குளிசைகளை உட்கொள்வதன் ஊடாக, பிற உபாதைகள் ஏற்படுமென நினைக்கு நோயாளர்கள், உணவு கட்டுப்பாட்டுக்கு முயற்சிக்கின்றனர். அதனை தெரிந்துகொண்ட விளம்பரதாரர்கள் தங்களுக்கு சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்கின்றனர். எனினும், உணவின் ஊடாக நோய்களை குணப்படுத்த முடியாது என சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஆனந்த ஜெயலால் தெரிவித்துள்ளார்.

“பொதுவாக உணவின் முக்கிய எதிர்பார்ப்புகள் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியாகும். நோய்களைக் குணப்படுத்துபவைகளை மருந்துகள் என்கிறோம்.உணவால் நோய்களைக் குணப்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார். ஆகையால், நோயாளர்கள் வைத்தியர்களின் ஆலோசனைகளை பெறுவதே சிறந்தது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறம்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்கநிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களை காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாவம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

அம்பாறை மாவட்டத்திலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமான களஞ்சியசாலைகளை திறந்து விவசாயிகளிடம் இருந்து சிறுபோக நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட விவசாய அமைப்புகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளதால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற்களஞ்சிய சாலைகள் இதுவரை திறக்கப்படாமல் உள்ளதாகவும், நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தரவாத விலைக்கு விவசாயிகளிடமிருந்து செல்லை கொள்வனவு செய்யாமல் இருப்பதால் மிகவும் குறைந்த விளைச்சல் மூலம் கிடைக்கும் நெல்லை விவசாயிகள் தனியாருக்கு குறைந்த விலைக்கே விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள நெல் களஞ்சிய சாலைகளை திறந்து அரசாங்கம் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்ப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.ஹனீபா

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – II

# அதிகாரம் குறித்த குறிப்புகள் - 4



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திர இலங்கையின் அரசியல் செல்நெறியென்பது செயலற்ற புரட்சியின் தன்மைகளைக் கொண்டிருந்தமையை கடந்தவாரம் கண்டோம். அதன் சிங்கள பௌத்த பேரினவாத அடித்தளம் எவ்வாறு இலங்கையின் பன்மைத்துவத்தை அங்கீகரிக்க மறுத்தது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையில் தொடங்கிய இப்போது 1970களில் புதிய வடிவில் அதிகாரத்தைத் தக்க வைக்க முயன்றது.

1970களிலும் அதற்குப் பின்னரும் அரச எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் பரவலுக்கு மத்தியில் இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய செயலற்ற புரட்சியின் பழமைவாத ஓட்டம் தொடர்ந்தது. பாரம்பரிய இடது மற்றும் தொழிற்சங்க இயக்கத்தின் சரிவு, பழமைவாத செயலற்ற புரட்சியின் மேலாதிக்க தாக்கத்தின் விளைவாகும்.

இடதுசாரிகளின் சரிவு ஒரு முக்கியமான அரசியல் வெற்றிடத்தை உருவாக்கியது. அரசியல் அணிதிரட்டலை எதிர்கொள்வதற்கான இந்த வெற்றிடம் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களில் ஆயுதமேந்திய கிளர்ச்சி அரசியலால் ஆக்கிரமிக்கப்பட்டது.

ஆயுதமேந்திய கிளர்ச்சி மற்றும் கிளர்ச்சியின் புதிய அரசியல் இலங்கையில் எதிர்ப்பு அரசியலின் தன்மையை மாற்றியது. அது வர்க்க அணிதிரட்டலை இன-அடையாள அரசியலாகவும், வெகுஜன அணிதிரட்டலை ஆயுதப் போராட்டத்தின் ஆளணி அடிப்படையிலான அரசியலாகவும் மாற்றியது.

இதற்கிடையில், அரசுக்கெதிரான கிளர்ச்சிகளின் பரவலானது அரசால் எதிர்ப்புரட்சிகளின் வழி பதில்களை உருவாக்கியது. அரசாங்கம் ஆயுதமேந்திய கிளர்ச்சிகள் மற்றும் கிளர்ச்சிக்கு எதிரான பதில்கள் கூட்டாக நீடித்த உள்நாட்டுப் போரை உருவாக்கியதும், அரசு இரண்டு இணையான முறைகளில் செயல்படத் தொடங்கியது. ஒன்று, அதன் நிறுவனங்கள் மற்றும் ஜனநாயக ஆட்சியின் நடைமுறைகள் மூலம் ஒரு ரூகு39;சாதாரணரூகு39; அரசாக, மற்றையது, அதன் சொந்த குடிமக்களுடன் நீடித்த உள்நாட்டுப் போரில் ரூடவ்டுபட்ட ஒரு அரசாக.

உள்நாட்டுப் போரின் போது இலங்கையில் இந்த இரண்டு அரச இருப்பு முறைகளுக்கு இடையே ஒரு ‘அவசரகால நிலை’, உண்மையில் மற்றும் உருவகமாக, மத்தியஸ்தம் செய்தது. இது இலங்கையின் சமகால அரசியலில் மற்றுமொரு விபரீதத்திற்கு வழிவகுத்தது.

இரண்டு முரண்பாடான மற்றும் பரஸ்பர விரோதமான செயல்முறைகள், ஒன்று தேர்தல்-ஜனநாயக அரசியல், மற்றொன்று ஆயுதமேந்திய கிளர்ச்சி மற்றும் எதிர் கிளர்ச்சி அரசியல் ஆகியவை அருகருகே இருக்கத் தொடங்கின, ஒன்று மற்றொன்றின் தொடர்ச்சியான இனப்பெருக்கத்தை செயல்படுத்தியது.

சுமார் மூன்று தசாப்தங்களாக விடுதலைப் புலிகளால் நீடித்த பிரிவினைக்கான நீடித்த ஆயுதக் கிளர்ச்சியானது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் உயரடுக்கினரிடையே இனப் பேரம் பேசுவதற்கான ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பை உருவாக்கியதாகத் தெரிகிறது.

இதை நடைமுறை இனங்களுக்கிடையிலான உயரடுக்கு தங்குமிடம் என்று விவரிக்கலாம். விடுதலைப் புலிகள் யுத்தத்தின் மூலம் பிரிந்து செல்வதற்கான அர்ப்பணிப்பு மற்றும் தமிழ் சமூகத்தில் அதன் போட்டியாளர்கள் மீதான அதன் வன்முறை விரோதப் போக்கு, இதற்கு முன்னர் கிளர்ச்சியில் ரூடவ்டுபட்டிருந்த பல தமிழ் அரசியல் கட்சிகளை பிரதான சிங்களக் கட்சிகளுடன் நெருக்கமான கூட்டணியை ஏற்படுத்தத் தள்ளியுள்ளது. ரூடவ்ழ மக்கள் ஜனநாயக முன்னணி, தமிழர்களின் மக்கள் விடுதலை அமைப்பு மற்றும் ரூடவ்ழ மக்கள் புரட்சிகர முன்னணி ஆகியவை ஜூலை 1987 இன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்த தங்குமிட விருப்பத்தைத் தேர்ந்தெடுத்தன.

பிரிவினையை ஒரு குறிக்கோளாகவும், போரை ஒரு அரசியல் மூலோபாயமாகவும் அவர்கள் தொடர்ந்து எதிர்த்ததோடு, தமிழ் அரசியல் போராட்டத்தின் இலக்காக அதிகாரப் பகிர்வு சாத்தியமாகும் என்ற கருத்தையும் அவர்கள் கொண்டிருந்தனர். இறுதியில் பாராளுமன்ற அரசியலில் இணைந்தனர்.

முஸ்லிம் அரசியலிலும் இதற்கு இணையான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. பிராந்திய சுயாட்சிக்கான தமிழர் கோரிக்கைகளுக்கு பதிலளித்த முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு பிராந்திய சுயாட்சிக்காக பேரம் பேசத் தொடங்கினர்.

1986-1987 இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கம் பிராந்திய சுயாட்சிக்கான முஸ்லிம் அணிதிரட்டலில் ஒரு முக்கிய வளர்ச்சியாகும். இவ்வாறு, 1980களின் பிற்பகுதியிலும், 1990களின் முற்பகுதியிலும், சிறுபான்மை இன அரசியல் இரண்டு மாதிரிகளை உருவாக்கியது, விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் மூலம் பிரிவினை மற்றும் பாராளுமன்ற அரசியலில் ரூடவ்டுபட்டுள்ள தமிழ் கட்சிகள் கோரும் பிராந்திய சுயாட்சி. முதலாவது இலங்கையின் தற்போதைய அரசை சீர்திருத்த வேண்டும் என்று வாதிடவில்லை, ஆனால் இரண்டாவது அதைச் செய்தது.

இந்தப் பின்னணியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்னவெனில், மாகாண சபைகள் ஊடாக வரையறுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு மற்றும் மத்தியில் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றைக் கொண்ட இரட்டைக் கட்டமைப்பில் பிராந்திய சுயாட்சிக்கான முஸ்லிம் மற்றும் தமிழ் கோரிக்கைகளுக்கு இடமளிப்பதற்கு ஸ்ரீ.ல.சு.க மற்றும் ஐ.தே.க ஆகிய இரு கட்சிகளினதும் சிங்கள அரசியல் தலைமைகள் கடைப்பிடித்த உத்தியாகும். கூட்டணி அரசியல் மூலம். 1978 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை தனது கூட்டணி அரசாங்கத்தில் சேர ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அழைத்த போது, இ.தொ.க. இணைந்து கொண்டது.

பிரிவினைக்கான பிரச்சாரத்திற்காக 1976 இல் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன்இ.தொ.க தன்னை இணைத்துக் கொண்டிருந்தது. ஆனால் வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் நலன்கள் மலையகத் தமிழர்களின் அரசியல் நலன்களுடன் ஒத்துப்போவதில்லை என்பதை உணர்ந்து இ.தொ.கா அக்கூட்டணியில் இருந்து விலகியது. இ.தொ.கா தலைமையானது அரசுடனான மோதலை கைவிட்டு பேச்சுவார்த்தையும் சமரசமும் என்ற பாதையைத் தெரிவு செய்தது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவின் யூ.என்.பி அரசாங்கம் இரண்டு அடிப்படையில் இ.தொ. காவைக் கையாண்டதன் மூலம் சிறுபான்மையினரிடையேயான ஒற்றுமையை வெற்றிகரமாகக் குலைத்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது, பாராளுமன்ற அரங்கில் இனவாத பேரம் பேசும் பழைய அரசியலுக்குப் பதிலாக பிரிவினைவாத வன்முறைகள் தொடங்கும் போது ஒரு தமிழ் சமூகத்தை மற்றொன்றில் இருந்து பிரிப்பது.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தோட்டத் தொழிலாளர்கள் இருந்தனர். இ.தொ.கா அவர்களின் பிரதான தொழிற்சங்கமாகவும் அத்துடன் அவர்களது அரசியல் குரலாகவும் இருந்தது. எனவே அவர்களை பொது ஐக்கியத்தில் இருந்து பிரித்துத் தனித்துக் கையாள்வது.

1978 இல் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையை அறிமுகப்படுத்திய போது பொது மற்றும் தனியார் துறைகளில் ஊதிய முடக்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் பேரம் பேசும் திறன் பலவீனமடைதல் ஆகியவை புதிய பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையின் முக்கிய கூறுகளாகும்.

இடதுசாரிக் கட்சிகள் மற்றும் ஸ்ரீ.ல.சு.க.வைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மீது தாக்குதல் நடத்தும் கொள்கையை அரசாங்கம் முன்னெடுத்த அதேவேளை, மலையகத் தமிழர்களின் இ.தொ.காவை நோக்கிய அதன் கொள்கையானது அரசியல் இணக்கமாக இருந்தது. 1978 இல் அரசாங்கத்தில் இணைந்த இ.தொ.காவின் தலைவர் அமைச்சரவை அமைச்சரானார், எனினும் ஆட்சியின் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தும் திறன் எதுவுமே இருக்கவில்லை.

மிதவாத சிறுபான்மைக் கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர இணக்கத்தின் இந்த மாதிரியானது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச (1988-1993) மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க (1994- 2005) ஆகியோரின் அரசாங்கங்களின் கீழும் தொடர்ந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்திலும் (2005 முதல்) அது தொடர்ந்தது.

இலங்கையின் இந்த அனுபவம் எழுப்புகின்ற கேள்வி யாதெனில், இனங்களுக்கிடையிலான உயரடுக்கு கூட்டணிகளின் அரசியல் இலங்கையின் அரச சீர்திருத்த செயல்முறையை எளிதாக்கியதா? என்பதாகும்.

இந்த துறையிலும், இன உயரடுக்குகள் அரச சீர்திருத்தத்திற்கான நடைமுறை மாற்றுகளைக் கண்டறிந்துள்ளனர். ஐதேக, ஸ்ரீலசுக ஆகிய இரண்டினதும் சிங்கள அரசியல் தலைமைகள், அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் அதிகாரப் பகிர்வை வலுப்படுத்துவதை விட, மத்திய அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் சிறுபான்மை அரசியல் உயரடுக்குகளுக்கு இடமளிக்கும் மூலோபாயத்தை மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் குறைவான அச்சுறுத்தலாகவும் கண்டுள்ளனர்.

இவ்வாறு இனங்களுக்கிடையிலான உயரடுக்கு கூட்டணி அரசியல் என்பது இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டின் புதிய வடிவமாக உருவெடுத்துள்ளது, இதற்கு அரசியல்-கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தேவையில்லை. இதுவரை, குறுகிய கால, நடைமுறை விளைவுகளின் அடிப்படையில் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை அரசியல் உயரடுக்குகளை திருப்திப்படுத்தியுள்ளது.



# கொமர்ஷல் வங்கி 6 விருதுகளை வென்றுள்ளது

சிங்கப்பூரில் நடைபெற்ற ஒரே நிகழ்வான ஆசிய வங்கி மற்றும் நிதி (Asian Banking and Finance - ABF) வருடாந்த விருதுகள் 2024 விழாவில் மூன்று வெவ்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க ஆறு விருதுகளை கொமர்ஷல் வங்கி வென்றது.

கொமர்ஷல் வங்கி மூன்று பிரிவுகளிலும் ஒவ்வொன்றிலும் இரு விருதுகள் என்ற ரீதியில் வென்றுள்ளது. ABF சில்லறை வங்கியியல் விருதுகள், ABF பெருநிறுவன மற்றும் முதலீட்டு விருதுகள், மேலும் ABF Fintech விருதுகள், ஆகிய மூன்று பிரிவுகளிலும் வங்கியானது 6 விருதுகளை இவ்வாறு வென்றுள்ளமை வங்கியியல் மற்றும் நிதித்துறையின் பல்வேறு பிரிவுகளில் அதன் பல்துறைத்திறனை வெளிப்படுத்துகிறது.

சில்லறை வங்கியியல் விருதுகள் பிரிவில் 'ஆண்டின் டிஜிட்டல் நுகர்வோர் வங்கியியல் திட்ட முயற்சி' மற்றும் 'ஆண்டின் SME வங்கி' ஆகிய விருதுகளை வங்கி பெற்றது பெருநிறுவன மற்றும் முதலீட்டு விருதுகள் பிரிவில் 'ஆண்டின் பெருநிறுவன வாடிக்கையாளர் திட்ட முயற்சி' மற்றும் 'ஆண்டின் கடன் ஒப்பந்தம்' ஆகிய விருதுகளை பெற்றது. மேலும் Fintech விருதுகள் பிரிவில் சுற்றுச்சூழல் முறைமை ஒத்துழைப்பு விருது மற்றும் கொடுப்பனவு தீர்வு விருது ஆகிய விருதுகளை வென்றது.

ABF இன் இந்த ஆண்டின் சிறந்த டிஜிட்டல் நுகர்வோர் வங்கியியல் திட்ட முயற்சிக்கான விருதை கொமர்ஷல் வங்கியின் முதன்மை டிஜிட்டல் தயாரிப்பும் இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் வங்கித் தளமுமான ComBank Digital வென்றது.

ஆண்டின் SME வங்கி விருது இலங்கையில் SME துறைக்கு மிகப் பெரிய கடன் வழங்குபவராக கொமர்ஷல் வங்கியின் அந்தஸ்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

> **"இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் வங்கித் தளமுமான ComBank Digital வென்றது**

அத்துடன் தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் வர்த்தகத்தை வளர்ப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் அணுகலுடன் செயற்படுவதற்கு அவர்களை மேம்படுத்துவதற்கு வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட எண்ணற்ற முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதுடன் அவர்கள் டிஜிட்டல் தளங்களுக்கு மாறுவதற்கும் சர்வதேச சந்தைகளை அடைவதற்கும் வசதி வாய்ப்பினை அளிப்பதையும் வெளிப்படுத்துகிறது.

அந்நிய செலாவணி விகிதக் கோரிக்கைகளை நவீனமயமாக்குதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட முன்னோடி திட்ட முயற்சியான 'Treasury FX Portal' - என்பதற்காக கொமர்ஷல் வங்கி இந்த ஆண்டின் பெருநிறுவன வாடிக்கையாளர் திட்ட முயற்சி விருதை வென்றது.

இதே வேளை, 2023 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட கடன் சாதனங்களுக்காக டிசம்பர் 2023 பொதுச் சந்தைகள் மூலம் திரட்டப்பட்ட மிகப் பெரிய தொகையான வங்கியின் ரூ.12 பில்லியன் Basel III கடனீட்டுப் பத்திர வெளியீட்டிற்காக இந்த ஆண்டின் கடன் ஒப்பந்தம் விருது வழங்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக (SME)கள் வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் வர்த்தக சுற்றுச்சூழல் முறைமையான கொமர்ஷல் வங்கியின் LEAP உலகளாவிய இணைப்பாளருக்காக (LEAP Global Linker) சுற்றுச்சூழல்முறைமை ஒத்துழைப்பு விருதை வென்றது.

கொமர்ஷல் வங்கியின் புதுமையான, செலவு குறைந்த மற்றும் நிகழ்நேர இணையத்தள பணப்பரிவர்த்தனை சேவையான ரெமிட் பிளஸுக்கு கொடுப்பனவு தீர்வு விருது வழங்கப்பட்டது.

UNIMO உடன் HNB

# மூலோபாய கூட்டாண்மையில் இணைவு

HNB PLC, United Motors இன் வாகனப்பிரிவான UNIMO உடன் மூலோபாய கூட்டாண்மையில் இணைந்துள்ளது.

இந்த கூட்டாண்மை, வாகனங்களில் முதலீடு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு இரு நிறுவனங்களின் நன்மைகளுடன் இணைக்கப்பட்ட பிரத்தியேக வட்டி வீதங்களை வழங்கும்.ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்வில் HNB வாடிக்கையாளர் வங்கிப்பிரிவின் தலைவர் காஞ்சன கருணாக மற்றும் UNIMO பொதுமுகாமையாளர் ஷலென் டி சில்வாஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த HNBஇன் வாடிக்கையாளர் வங்கிப்பிரிவின் தலைவர் காஞ்சன கருணாகம,

"HNB-ல், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான மற்றும் மலிவு விலையில் நிதி தீர்வுகளை வழங்குவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

UNIMO உடனான எங்கள் கூட்டாண்மை, எங்கள் இரு நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கும் வாகனங்கள் வாங்கும் போது, இணையற்ற நன்மைகள் மற்றும் சலுகைகளை வழங்குவதற்கான எங்கள் திறனை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த தனித்துவமான வாய்ப்பை பலர் பயன்படுத்தி வாகனங்களில் முதலீடு செய்வார்கள் என்று நம்புகிறோம். என தெரிவித்தார்.

இந்த கூட்டாண்மையின் கீழ், HNB அதன் விரிவான வாடிக்கையாளர் தளத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பலவிதமான கவர்ச்சிகரமான நிதித் தேர்வுகளை வழங்கும். வங்கி 5 ஆண்டுகள் வரையிலான கட்டமைக்கப்பட்ட லீசிங் முறைகள் மற்றும் மிகுதியான லீசிங்களுக்கு கூடுதல் வட்டி கட்டணங்கள் இல்லாமல் நிலவும் வட்டி விகிதத்தை வழங்கும்.

இந்த சலுகையைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் Prestige Prime Credit Card மூலம், வாகனப்பொருட்கள், பராமரிப்பு சேவை, உதிரிபாகங்கள், டயர்கள், பேட்டரிகள் மற்றும் பலவற்றில் பிரத்தியேக அட்டை சலுகைகள் மற்றும் சிறப்பு தள்ளுபடிகளைப் பெறலாம். மேலும், HNB General Insurance ரூ. 4.5 மில்லியன் மதிப்புள்ள இலவச ஆயுள் காப்புறுதி மற்றும் ரூ. 600,000 வரையான இயற்கை மரண காப்புறுதி தொகையையும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.




# இரசிக்கப்படாத காலம்





மனோஜா இரத்தினகுமார்

மலரும் சூரியனையும்
மறையும் திங்களையும்
பின்னிரவு நிலவையும்
பௌர்ணமி ஒளியையும்
கருமேக இருளையும்

விடிவெள்ளி அழகையும்
விட்டில் பூச்சி ஒளியையும்
மொட்டவிழும் பூக்களையும்
மோதும் தென்றலையும்
புழுதிமண் வாசத்தையும்

இன்று
சுடுகாட்டுப் பிணங்களே
சொந்தம் கொண்டாடுகின்றன...
மழைக்குருவி

# சாந்தி..

இறந்துபோன சாரதாவின் சாயலாய்
பலகாரச்சூட்டின் வாசம் நுகர்ந்தபடி
வீட்டின் நடுவே அசைவற்றுக் கிடக்கிறது
வெள்ளைப் பூனை....

கலர் பூசப்பட்ட சிமெத்துச் சுவர்கள்
நடுவே குவிந்து கிடக்கும்
மரக்கறி மூட்டைகளில் மோதி வழியும்
அப்புவின் பெருமூச்சில் உலர்கிறது
கழுவப்பட்டவிறாந்தை ...

முற்றத்தில் உயர்ந்து நிற்கும்
பந்தலில் தொடக்கு வீட்டின்
சரடுகள் உதிர்ந்து போயின.....

பால் பழம் பலகாரம் படையல்...
சூழ்ந்திருந்த முகங்களிளெல்லாம்
ஆத்துமாவின் ஆசையெல்லாம்
தீர்த்தபெரும் திருப்தி அப்பியிருந்தது ...

படையலின் முன்னால் உரிமைச் சோற்றை
அள்ளி மெல்கையில் உதிர்ந்துவிழும்
அப்புவின் கண்ணீரில்
சாரதாவின் ஆத்துமா
இன்னும் சுற்றிக்கொண்டிருக்கிறது ...



சுடர்நிலா



# மாறுவது இளமை...!



ஷெல்லிதாசன்

காவோலையைப் பார்த்து
குருத்தோலைகள் சிரிக்கின்றன.
தாம் எப்பொழுதும்
மாறாத குருத்தோலைகள் தான்
என்ற மதையில்.

இப்பொழுது
காதோரம் வெளுத்து விட்ட
ஓலைகளைப் பார்த்தே
குருத்துக்கள் சிரிப்பதால்
வெளுப்புகளைக் கறுப்பாக்கி
வீதிவலம் வருகின்றன
அந்த நடுத்தர ஓலைகள்.

பிறரை நீ கிண்டல் கேலி செய்ய
ஒருகாலம் வந்தது போல
உன்னையும் அடுத்த பரம்பரை
கிண்டல் செய்து கேலி செய்ய
காலம் விரைந்தோடி
வருவதென்னவோ நிச்சயமே.
எனவே
மற்றவர் மனசை உடைத்து
உனது மனக்குரங்கிற்கு
மடைபோடும்
கீழ்த்தர முகமூடிகளை
கிழித்தெறி.
புனிதனாகத் தேவையில்லை
நீ
மனிதனாகவே இருந்தால்
அதுவே போதுமானது.

# மருந்தோடு அலையும் பி(ப)ணியாளர்


இருக்கையில் இல்லாத் தெள்ளமுது
பிரிகையில் நெஞ்சில் சுரக்கிறது
விருப்பினை எண்ணி அவள் போக
சுள்ளென மனது வலிக்கிறது

தாய் நிலம் உன்னைத் தாலாட்ட - என்
தாய் நிலம் எனக்கு சுடுகிறது
போய் வா மலரே வாடாதே - உன்
வாசங்கள் என்னோடு தானிருக்கும்

வக்கற்றுப் போனவன் தலைநிமிர
காலம் ஒருநாள் கைகட்டும்
வெக்கறை படித்த சூழ்நிலைகள்
ஓடோடிப் போகக் காலம் வரும்

விரும்பாத பயணத்தை உள்ளுணர்வு - இன்று
தடுத்திடத்தானே துடிக்கிறது
மடத்தடி நிழலையோ நான் தேட - மனதில்
அடிக்கடிகுழப்பங்கள் நடக்கிறது

கொள்கைகள் கொன்று இதைச் சுகமாக்க
மருந்து என்னிடம் இருக்கிறது
உனக்கும் மேலாய்ப் புத்தகங்கள் - அதை
மறுத்து என்னை அழைக்கிறது





புத்தகன் வவுனியா



# போதை அரக்கனின் பிடியில் மாணவ சமுதாயம்

**பேரின்பராசா சுலைக்சா**
நான்காம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி, கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம் ,வந்தாறுமூலை

**வியாழன் தொடர்ச்சி...**

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உறுதுணையாகவும் ஊண்டுகோலாகவும் அமைவது பாடசாலையும் அதனூடான கல்வியும் ஆகும். அதேபோல சிறந்த முறையில் சமூகமயமாக்கப்படுவதும் பாடசாலையினாலேயே ஆகும். ஆனால் சமீப காலத்தில் ஒரு சில சுயநலவாதிகளினால் பாடசாலைகளில் சில எதிர்மாறான நடவடிக்கைகள் இடம்பெற்று பலதரப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவற்றுள் மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி, தலை விரித்தாடிக் கொண்டிருக்கும் போதை பொருள் பாவனை முக்கியமானதாகும்.

பாடசாலைகளில், சில கயவர்களால், போதைப்பொருள்பாவனை அதிகரித்துள்ளமை வேதனைக்குரிய ஓர் விடயம் ஆகும். இதன் காரணமாக மாணவ சமுதாயத்தை சிறந்த சமூகமயமாக்களுக்கு உட்படுத்தி எதிர்காலத்தின் தலைவர்களை உருவாக்க வேண்டிய பாடசாலை "போதை மனிதனை" உருவாக்கி விடுகிறது.

தற்காலத்தில் போதைப்பொருளை பயன்படுத்தும் வீதம் இலங்கையை பொறுத்தமட்டில் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. அதிலும் இளம் வயதினரிடம் எல்லை மீறிச் செல்கின்றதையும் காணக்கூடியதாகவே உள்ளது.

அந்தவகையில் ஐஸ் போதைப்பொருள் தொடர்பில், 2022 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் 2022 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலப்பகுதியில் 67,900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 10,221 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 4,983 பாடசாலைகளில், பெரும்பாலான மாணவர்கள் போதைப்பொருள் பாவனையில் ஈடுப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன்படி, மாணவர்களுக்கு விற்பனை செய்த 517 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சோதனைகளில் 85 கிராம் ஹெரோயின், 48 கிராம் ஐஸ், 1,561 போதைமாத்திரைகள், 1 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா, 3 கிலோ மாவா, 2 கிலோவிற்கும் அதிகமான மதன மோதக மாத்திரைகள், 1,285 சிகரட்டுக்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது, பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்ட போதைப்பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல் வேலைகள் மிகவும் சூட்சமமாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. யார்? இவ்வாறான வேலைகளில்ஈ படுகின்றனர் என்பதில் பல கருத்துக்களும் காணப்படுகின்றது. அந்தவகையில், இலங்கைக்கு ஆகாய மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் இந்தப் போதைப்பொருள்கள் கடத்தி வரப்படுகின்றன. முக்கியமாக இவ்வாறு கொண்டு வரப்படும் போதைப் பொருட்கள் வட மாகாணங்களுக்கு இலகுவாக கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அதன் அடிப்படையில் இவ்வாறு கொண்டு வரப்படும் போதை பொருட்களை மையமாக வைத்து அண்மைக்காலங்களில் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளை மாணவர்கள் பயன்படுத்துவதும் அதிகரித்துள்ளது.

இதற்கு சில இனம் தெரியாதவர்கள் காரணமாக உள்ளனர். "வறுமையில் இருப்போரை இந்தத் தொழிலுக்குள் இலகுவில் ஈர்த்து, அவர்களை போதைப் பொருள் கடத்தலில் வியாபாரிகள் பயன்படுத்துகின்றனர்ரூஙரழவ் என மாவட்ட அரச அதிபர் மகேசன் குறிப்பிடுகின்றார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்தியாவிலுருந்தே அதிகமான போதைப்பொருள் கொண்டு வரப்படுவதாக கூறுகின்றார்.

இதற்கு சான்று பகிரும் விவகாரமாக இந்தியாவிலிருந்து படகு ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட சுமார் 41 மில்லியன் ரூபாய் பெறுமதியான 139 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடும்பப் பின்னணி பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனைக்கு உடந்தையாக அமைகின்றது. 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 14-ஆம் திகதி குருநாகல் மதுராகொட பிரதேசத்தில் பாடசாலை ஒன்றில் நான்கு மாணவர்கள் போதை பொருளை உட்கொண்ட விவகாரத்தில் ஒரு மாணவனின் தந்தை ஹெரோயின் போதைக்கு அடிமையானவர் எனவும் அவர் மீது போதைப்பொருள் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிள்ளையொன்று ஒழுக்க விழுமியம் உள்ள பண்பாட்டு கலாச்சாரத்துடன் வீட்டுச் சூழலில் வளர்க்கப்படுமாயின் பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி நிலையச் சூழலில் ஏற்படும் பண்பாட்டு மாற்றத்தினாலும் சமய வயது குழுக்களின் அழுத்தங்களினாலும் வழி தவறி செல்வது, குறைவாக காணப்படும். அவ்வாறில்லையாயின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை உருவாக்குபவர்களாக மாறுகின்றனர். இவர்கள் இத்தகைய போதைப் பொருள் கடத்தல், விற்பனை மற்றும் பாவனைக்கும் உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, தொழில் வாய்ப்பின்மை, இலக்குகளை அடைவதில் தோல்வி, மேலைத்தேய நாகரீக மோகம் கலாசாரமாக உருவெடுத்தல், தனிமை, கடின உழைப்பு, மகிழ்ச்சி, திருப்தி, உல்லாசம், பிரச்சினைகளை மறுத்தல், உடற்கலைப்பை போக்கல், போன்ற போதைப்பொருள் தொடர்பான தவறான நம்பிக்கை திட்டமிட்ட விளம்பரங்கள், சின்னத்திரை, மற்றும் சினிமா நடிகர்களின் செயற்பாடுகளை முன்மாதிரியாக கொள்ளல், கௌரவம் போன்ற காரணிகளும் ஒரு தனி மனிதன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது.

மேலும் மாணவர்களின் நட்பு வட்டாரங்களின் ஊடாகவும் போதைப் பொருட்கள் பாடசாலைகளுக்குள் கொண்டுவரப்படுகின்றது. அதனடிப்படையில் 2023 ஆம் ஆண்டு திருச்சியில் இடம்பெற்ற போதைப் பொருள் விற்பனை செய்த ஒருவரின் விசாரணையில் நண்பர்களினூடாக பாடசாலைக்குள் கொண்டு செல்லப்படுகிறது.

மேல் மாகாணத்தில் உள்ள 149 பாடசாலைகளை உள்ளடக்கி இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதில் இருந்து 01 கிலோ 260 கிராம் மாவா, 09 கிராம் 630 மில்லிகிராம் ஹெரோயின், 02 கிராம் 38 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 207 கிராம் 590 மில்லி கிராம் கஞ்சா ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 17 வயது சிறுவன் மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரச பாடசாலைக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்து.

அதுமட்டுமல்லாது போதைப்பொருள் விற்பனை தொடர்பாக ஆசிரியர்களை கைது செய்த அபாயகரமான விவகாரமும் இலங்கையில் நடந்தேறி உள்ளது.

எடுத்துக்காட்டாக 2022 ஆம் ஆண்டு களுத்துறை பகுதியில் நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனவே சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கி, நாட்டின் எதிர்காலத்தை சுபிட்சமாக, சமூகத்தில் திகழ்கின்ற மிக முக்கியமான சமூகமயமாக்கல் முகவராக பாடசாலை காணப்படுகின்ற போதிலும் சில நபர்களினால் போதைப் பொருள் பாவனையானது பாடசாலை மாணவர்களிடத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

போதை இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவோம் என்ற எண்ணக்கருவின் கீழ் 1987 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளாக இது கருதப்படுகிறது.

ஆகவே மாணவர்களிடத்தில் போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாக, பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களை தடுப்பதற்கு அரசாங்கமானது கடுமையான சட்டங்களை கொண்டு வந்து அமுல்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.


மேலும் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாக்கப்படும் மாணவர்களினையும் அதேசமயம் சமூகத்தினரையும் சிறந்த முறையில் விழிப்புணர்வையூட்டி, ஆலோசணைகளை வழங்குவதன் மூலம் போதைப் பொருள் பாவனையை தடுக்கலாம்.

"அனைவரும் ஒன்றிணைவோம் போதைப்பொருளை ஒழிப்போம்."

முற்றும்.

# கல்விச் சமூகமயமாக்கலில் பால்நிலை சமத்துவம்

**அமிர்தலிங்கம் சதுர்சினி**
நான்காம் வருட கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவி, கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்,



பால்நிலை சமூகமயமாக்கல் என்பது ஒரு நபர் தங்கள் பால் நிலையைப் பற்றிய சமூக (நியமங்கள்) விதிமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கற்றுக்கொள்ளும் செயன்முறையாகும். இது ஒரு நபர் அவர்களின் பாலின அடையாளம், பாலினப் பாத்திரங்கள் மற்றும் பாலின உறவுகள் ஆகியவற்றைப் பற்றிய அவர்களின் புரிதலை விருத்தி செய்ய உதவுகிறது.

இச்செயன்முறை குழந்தை பிறந்ததிலிருந்து ஆரம்பித்து விடுவதைக் காணலாம். புதிதாக பிறந்த ஆண் குழந்தைக்கு நீல நிற ஆடைகளையும் பெண் பிள்ளைகளுக்கு இளஞ்சிவப்பு ஆடைகளை அணிவிப்பது, பெயர்களில் பால் வேறுபாடு காட்டுவது எனபதில் இருந்து இப்பால்நிலை சமூகமயமாக்கல் செயன்முறை ஆரம்பித்து விடுகிறது. இது ஒரு வகையில் எதிர்பார்க்கை சமூகமயமாக்கலாகக் கருதலாம்.

பால்நிலை சமத்துவம் என்பது ஆணும் பெண்ணும் "பால்" என்னும் வேறுபாட்டுக்கு அப்பால் சமமானவர்கள் என்பதை குறிக்கின்றது. சமுதாயத்தில் ஆண் பெண் இருபாலருக்கும் சமமான உரிமைகளை வழங்குவது பாலின சமத்துவமாகும்.

எல்லா இடங்களிலும் சம வாய்ப்புகளை வழங்குவது எல்லா இடங்களிலும் சமமாக மதித்து நடக்கப்படுவது பால் ரீதியான சமத்துவம் எனப்படுகிறது. மேலும் பால்நிலைச் சமத்துவத்தைப் பற்றி யுனிசெப் "பாலின சமத்துவம் என்பது பெண்கள்ரூபவ் ஆண்கள்சி, றுவர்கள் ஆகிய சமமான உரிமைகள், வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்றுபோல் நடத்தப்பட வேண்டும்" எனவும் கூறுகின்றது.

பால்நிலை சமூகமயப்படுத்தலில் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக பாடசாலை மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏற்கனவே குடும்பம் தொடக்கி வைத்த பால்நிலை சமூகமயமாக்கலை பாடசாலைகள் மேலும் முன்னெடுத்து ஆணும் பெண்ணும் எத்தகைய நடத்தைகளைச் சமூகத்தில் காட்ட வேண்டும் என்று அவை கச்சிதமாகக் கொடுக்கின்றன.

அந்தவகையில் பாடசாலையில் அனைவருக்கும் சமமான வகையில் கல்வியை வழங்கும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்ற வேளையிலும் இலங்கையில் உள்ள பாடசாலைகளில் மகளீர் பாடசாலைகள், ஆண்கள் பாடசாலைகள் என வேறுபடுத்தி இருந்தாலும் அதிகமான பாடசாலைகள் கலவன் பாடசாலைகளாகும். அந்தவகையில் தனித்தனியாகப் பெண்களும் ஆண்களும் கற்கும் பாடசாலைகளில் பால்நிலை வேறுபாடுகள் காணப்படுவதில்லை.

இலங்கைப் பாடசாலைகளின் கலைத்திட்டச் செயற்பாடுகளை முறைசார் கலைத்திட்டம், முறைசாரா கலைத்திட்டம் என இரண்டாகப் பிரித்து நோக்குகின்றார்கள். இதில் முறைசார் கலைத்திட்டத்தில் பாடநூல்களும் பாடத்திட்டங்களும் அடங்குகின்றன. அத்துடன் முறைசாரா கலைத் திட்டத்தில் மறைநிலைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. பாடசாலைகளில் மாணவர்கள் பாடங்களைத் தெரிவு செய்வதிலும் கூட பால்நிலை வேறுபாடுகள் ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதாவது ஆண் பிள்ளைகளால் தான் சில கற்கை நெறிகளைத் தொடர முடியும். ஆனால் பெண்கள் அவ்வாறான கற்கை நெறிகளைத் தெரிவு செய்தால் பல சிரமங்களை எதிர் நோக்குவார்கள் என்ற ஒரு மனப்பாங்கு அனைவர் மத்தியிலும் ஏற்கனவே விதைக்கப்பட்டுள்ளமையை இதற்குக் காரணமாக அமைகின்றது.

அந்தவகையில் விஞ்ஞானம், வர்த்தகம், பொறியியல், கணிதம், விவசாயம், தொழில்நுட்பம் போன்ற கற்கைநெறிகள் ஆண் பிள்ளைகளுக்கு பொருத்தமானது என்றும் கலைத்துறை சார்ந்த கற்கை நெறிகளான மனையியல், நடனம் போன்ற பாடநெறிகள் பெண்களுக்குப் பொருத்தமானது என்ற கருத்துக்கள் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் பாடசாலையில் அனைவருக்கும் சமமான வகையில் கல்வியை வழங்கும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்ற வேளையில், தேசிய ரீதியில் பொதுப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம். இது ஆண் பெண் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவான ஒரு பரீட்சையாக விளங்குகின்றது. இப்பரீட்சைகளில் தற்காலத்தில் ஆண்களை விட பெண்களே அதிகமாகச் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சொல்லுகின்ற நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எடுத்துக்காட்டாக, துறைரீதியான அடைவுகளோ ஆண் பெண் இருபாலாரிடையேயும் அவ்வத்துறைக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் துறைரீதியான ஆண் பெண் விகிதாசாரம் (2009 - 2015) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் கலைத்துறையை நோக்குவோமாயின் 75% பெண்மாணவர்களே உயர்தரச் சித்தி பெற்றுள்ளனர்.

கலைத்துறையை பொதுவாக ஆண் மாணவர்கள் தேர்ந்தெடுப்பதில்லை.

பெண் மாணவர்களோடு ஒப்பிடுகையில் கலைத்துறையில் உள்ள ஆண் மாணவர்களின் பரம்பல் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

கலைப் பயணம், விளையாட்டுப் போட்டி, பொருட்காட்சி, மாணவர் மன்றம், சாரணியம், முதலுதவி, பலவிதமான குழுக்கள் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளின் போது தலைமைத்துவப் பொறுப்பு ஆண்களுக்கு வழங்குவதோடு பெண்களுக்கான பொறுப்புக்கள் குறைந்தளவிலேயே வழங்கப்படுகின்றன.

குறிப்பாக பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் ஆண் மாணவர்களின் பங்குபற்றலும் தலைமைத்துவ வகிபாகமும் அதிகமாகக் காணப்படுவது வழமையான விடயமாகும்.

அதேபோன்று கபடி, காற்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் பெண் மாணவர்களின் பங்குபற்றல் மிகக் குறைவாக உள்ளதுடன் சில கிராமப்புற பாடசாலைகளில் இவ்வாறான விளையாட்டுகளின் பெண் மாணவர்கள் ஈடுபடுவதில் இன்றும் தயக்கம் காட்டி வருகின்ற நிலையைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் பாடசாலைகளில் இடம்பெறும் கலை நிகழ்வுகளில் பெண் மாணவர்களின் பங்குபற்றலே அதிகமாக இருக்கும். ஆனால் ஆண் மாணவர்கள் நடனம் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றும் போது அதனைச் சமூகம் வேடிக்கையாகப் பார்க்கின்ற நிலை அனைவர் மத்தியிலும் உருவாகிவிட்டது.

மேலும் இரு பாலாரையும் கலந்து குழுக்களை அமைக்கும்போது ஆண் பிள்ளைகளுக்கு தலைமைப் பொறுப்புகளை வழங்குவதையும் பெண் பிள்ளைகளுக்கு குறைந்த பொறுப்புகளை வழங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. பெரும்பாலும் இக்குழுக்களில் பெண்களின் கருத்துகள் நிராகரிக்கப்படும் நிலை அதிகமாக இருக்கின்றது.

கலவன் பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பு வகுப்பறையில் பால் வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துக்காட்டி வருகின்றது. உதாரணமாக இடாப்பில் மாணவர்களது பெயர்களை பதியும்போது முதலில் ஆண் மாணவர்களது பெயர்களையே பதிகின்றார்கள்.

மேலும் வகுப்பறை வேலைகளை மாணவர்களுக்கு ஆசிரியர் வழங்கும்போதும் பால்நிலை வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக வகுப்பறைச் சுத்தத்தின்போது வகுப்பறையை கூட்டுதல், தூசி துடைத்தல் போன்ற இலகுவான வேலைகளை மாணவிகளுக்கும் மேசை, கதிரையை இழுக்கும் பாரமான வேலைகளே மாணவர்களுக்கு ஆசிரியர்களினால் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு பாடசாலைகளில் பால் நிலை வேறுபாடுகள் காட்டப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. அந்தவகையில் இதனை நிவர்த்தி செய்யும் வகையில் சில செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

> **ஒரு சமூகம் சிறந்து விளங்க முடியும் என்பதோடு சுபீட்சமாக எதிர்கால பயணத்தை நோக்கியும் நகர முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை**

அதாவது கற்பிக்கும் போது ஆண், பெண் வேறுபாடுகள் பார்க்கக்கூடாது, தலைமைத்துவத்தில் இரு தரப்பிலும் தலைவர்களை நியமிக்க வேண்டும், வகுப்பறைச் சுத்தம், வகுப்பறை ஒழுங்குபடுத்தல் போன்ற செயற்பாடுகளில் பாகுபாடு காட்டக்கூடாது, விளையாட்டுக்களின் போது ஆண்களுக்கானது, பெண்களுக்கானது என்று வேறு பிரிக்காமல் அனைத்திலும் இரு தரப்பினரும் பங்கு கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

கலைவிழாக்கள் மற்றும் சுற்றுலா நிகழ்வுகளிலும் சமமான வாய்ப்பினை வழங்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை பாடசாலைகளில் முன்னெடுப்பதன் மூலம் சமூகத்தில் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் எனலாம்.

அதேபோன்று சமூகத்திலும் பால்நிலை சமத்துவமின்மை இடம்பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது வரதட்சனை முறை, சாதி, கற்பழிப்பு, பெண்களுக்கு எதிர்மறையான வன்முறை போன்றனவும் பெண்களின் குறைந்த நிலைக்கு காரணமாகின்றன அடுத்ததாக ஆணாதிக்கம்- பெண்நிலைவாதிகள் பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்த போதிலும் கூட பாரம்பரியமாக எமது சமூகத்தில் ஆண் தலைமை என்பது எழுதப்படாத விதியாகவே உள்ளது.

தந்தை, மூத்த சகோதரன், கணவன் போன்றோரின் ஆணைக்கு கீழ்படிந்து பெண்கள் இருக்கின்றனர்.

சாதாரணமாக ஒருவேலைக்கு விண்ணப்பிப்பதற்கான அனுமதி,நேர்முக பரீட்சையில் கலந்து கொள்ளல்ரூபவ் உயர் பதவிகளுக்கு விண்ணப்பித்தல் என தொழில் தொடர்பான அனைத்துமே ஆண்களின் அனுமதியின் கீழே தங்கி உள்ளது.

எனவே பெண்கள் தங்கள் முன்னேற்றத்தை குறித்து எவ்விதமான சுயமான முடிவையும் எடுக்க முடியாத நிலையும் ஆண்களின் அனுமதி பெற வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது ஒரு சமூகம் சுபீட்சமான பயணத்தை நோக்கிச் செல்வதற்கு சமூக மாற்றம் அவசியமாவதுடன், அம்மாற்றத்தை ஏற்படுத்துவதில் இளைய தலைமுறையினருக்கே பாரிய பொறுப்பும் சவாலும் உள்ளது என்பதை மறுக்கமுடியாது.

இளையோர்கள் மூலம் ஒரு சமூகம் விடிவைத் தேடுகின்றது என்றால் முதலில் இவர்களைத் தாக்கிக் கொண்டிருக்கும் பால்நிலை சமத்துவமற்ற போக்கு மாற வேண்டும். இதற்கு சமூகத்தின் பங்களிப்பு மிகவும் அவசியமாகின்றது.

அதேபோன்று பாடசாலைகளின் மூலமே இளையோர்களுக்கு நல்ல சிந்தனையை ஏற்படுத்தி சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியும். எனவே பால்நிலை சமத்துவத்திற்கான பாதையை இளையோர்களிடையே திறக்கும்போது ஒரு சமூகம் சிறந்து விளங்க முடியும் என்பதோடு சுபீட்சமாக எதிர்கால பயணத்தை நோக்கியும் நகர முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.




# மலையகம் இங்கிருந்து எங்கே?

மலையக சமூகத்தின் உருவாக்கம் மலையக தேசியம் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள். மலையகத்தின் கல்வி நிலை. சுகாதாரம், வீடமைப்பு, நாட்டார் பாடல்கள் என்று மலையகத்தின் அனைத்து அம்சங்களிலும் சார்ந்த தொகுப்பான. பீ.மரியதாஸ் எழுதிய. 'மலையகம் இங்கிருந்து எங்கே?' நூல் வெளியீட்டு விழா சமூக நலன் நிறுவனத்தில் கவிஞர் சு.முரளிதரன் தலைமையில் ஹட்டன் சமூக நலன் நிறுவனத்தில் கவிஞர் சு.முரளிதரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது.
சட்டத்தரணி ஏ.எஸ்.குமார் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். பி.அருள்மொழிச்செல்வன் நூல் ஆசிரியர் அறிமுகத்தை நிகழ்த்தினார்.
கொட்டகலை ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ஜே.சற்குருநாதன் ஆய்வுரையும் பேராசிரியர் தை. தனராஜ்,ஜி.போல் அந்தனி,கே. மெய்யநாதன்,எம், ஆர் விஜயானந்தன், வீரகேசரியின் பிரதி ஆசிரியர் சிவலிங்கம் சிவகுமார் ,ஆகியோர் நூல் பற்றி கருத்துரையும் வழங்கினர்.
எச்.எச் விக்கிரமசிங்க வெளியீட்டுரையும் விரிவுரையாளர் எம். அகிலன் நன்றியுரையும் வழங்க நூலாசிரியர் பீ.மரியதாஸ் ஏற்புரையையும் வழங்கினார்.
கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை சார்பில் மு. நித்தியானந்தன். எச்.எச் விக்கிரமசிங்க ஆகியோர் இந்த வரலாற்று ஆவணத்தை வெளியிட்டுள்ளனர்.
'செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துக்கள் மலையக எழுத்தில் தனி முத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலை படுத்தப்படாத மாண்பு அவருடையது. அயராத,ஆழ்ந்த அவரது வாசிப்பு அவரின் எழுத்திற்கு கனதிசேர்க்கிறது. அனைத்தையும் வரலாற்றுப் பின்புலத்தில் அனுகூலம் அவரின் ஆய்வு நோக்கு அவரது கட்டுரைகளுக்கு ஆழத்தைச் சேர்க்கிறது.
நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்சிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல். சமூகக் கையேடு.
நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்சிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல். சமூகக் கையேடு. "மலையகம் இங்கிருந்து எங்கே?"என்று மரியதாஸ் எழுப்பும் கேள்வி நம் சமூகத்தின் கூட்டுக் குரல். நிகழ்கால அவலத்திலிருந்து நம் சமூகம் எழுந்து நிமிர்ந்து, ஒளியை நோக்கி நகரும் எழுச்சியின் எக்காளம் அது.பேராசிரியர் மு. நித்தியானந்தன் நூலாசிரியர் பீ.மரியதாஸ் பற்றி இவ்வாறு பதிவு செய்துள்ளார்"











## மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்

'மெதோடிஸ் சர்ச் டெவ்லிங்' நிறுவனம் மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதி வெளியீடு செய்த 'மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்' என்னும் வரலாற்று ஆய்வு நூலில் ஒரு தொகுதி நூல் பெற்றுக்கொள்ளப்பட்டது.
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.டெ.அரவிந்தராஜ் முன்னிலையில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் குறித்த நிகழ்வு திங்கட்கிழமை (22) நடைபெற்றது.
இந் நிகழ்வில் மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் திருமலை ராசா தனேஸ், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட பிரஜைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜோன்சன் சந்திரிகா, மன்னார் ரோட்டரி கழக உறுப்பினரும் கிராம சேவையாளர் சிறிஸ்கந்தராஜா, மற்றும் டெவ்லிங் நிறுவனத்தின் உறுப்பினர்களும், கலந்து கொண்டனர்.

எஸ்.ஆர்.லெம்பேட்






### கவிஞர் வன்னியூர் செந்தூரனின்
## கவிதைகள் நூல் வெளியீடு

ஈழத்தின் கலை இலக்கியத்துறையில் ஒன்றரை தசாப்தத்திற்கு மேலாக பயணிக்கும் எழுத்தாளர் வன்னியூர் செந்தூரனின் கவிதைகள் நூல் வெளியீடானது அடங்காப்பற்று தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.
கீர்த்தனா படைப்பகத்தின் வெளியீடாக கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவரும்,மூத்த தமிழ் வித்தகருமான கலாநிதி – தமிழ்மணி அகளங்கன் ஐயாவின் தலைமையில் ஞாயிற்றுக் கிழமை (27) அவரது 5ஆவது நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.
இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னித் தேர்தல் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், கௌரவ விருந்தினர்களாக திருவையாறு மகா வித்தியாலயத்தின் அதிபர் விக்கினராஜா, IDM Nation Campus இன் வடக்கு கிழக்கு பணிப்பாளர் கலாநிதி – அன்ரூஸ் அனஸ்லி ,ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் சமூக செயற்பாட்டாளருமான துளசி, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் இ.சஜீதர லீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மு.தமிழ்ச்செல்வன்














## "CASE LOW ON MOTOR TRAFFIC ACT"

சிரேஸ்ட சட்டத்தரணியும்,பதில் நீதவானுமான எஸ். மோகனராஜன் தொகுத்து எழுதிய மோட்டார் வாகன வழக்கும் அதற்கான தீர்ப்பும் "CASE LOW ON MOTOR TRAFFIC ACT" என்ற சட்ட புத்தக வெளியீட்டு விழா இராகலை புறநெகும மண்டபத்தில் சனிக்கிழமை (20) இடம்பெற்றது.
இராகலை தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரேஸ்ட சட்டத்தரணியும் பதில் நீதவானுமான பி.பி.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த இவ் விழாவில் இப் புத்தகம் தொடர்பான அறிமுகத்தினை சட்டத்தரணிகளான பானுசந்தர், ரனாஞ்சி வீரதுங்க ஆகியோர் வழங்கியிருந்தனர்.
இந் நிகழ்வில் மூத்த எழுத்தாளரும், விமர்சகருமான முன்னால் கல்வி பணிப்பாளர் பி. மரியதாஸ் உட்பட கல்வி அதிகாரிகள் அதிபர்கள் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், சட்டப்படிப்பு மாணவர்கள், நகர வர்த்தகர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.


ஆ.ரமேஷ்




## 'முதல் மழைத்துளிகள்'

புத்தளத்தின் கவிஞர் அஷ்ஃபா அஷ்ரஃப் அலியின் கன்னி வெளியீடான முதல் மழைத்துளிகள் மரபு இலக்கண கவிதை நூலின் வெளியீட்டு விழா புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் புத்தளம் செய்னப் முஸ்லிம் பெண்கள் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் எச்.எம். மில்ஹான் தலைமையில் வெள்ளிக்கிழமை (02) நடைபெற உள்ளது.
இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் எம்.ஐ.எம். றிபாத், கௌரவ அதிதிகளாக புத்தளம் கல்வி வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் எம்.ஏ.எம்.எம் ஜவாத் மரைக்கார், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் இஸட் ஏ.சன்ஹீர், மற்றும் ஓய்வு நிலை ஆசிரியர் ஆலோசகர் ஏ.டி.எம்.நிஜாம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்.யூ.எம் சனூன்



தெஹ்ரான்

ஹனியே படுகொலைக்கு

# பழி தீர்க்கப் போகும் ஈரான்



ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலைக்கு பழிக்கு பழி தீர்க்க இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்த ஈரான் அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், உலக நாடுகளிடையே உச்சகட்ட பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகிறது. இதுவரை 39 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது ஈரான் மற்றும் ஹமாஸ் இடையே நேரடி மோதல் சூழல் ஏற்பட்டுள்ளது. ஈரான் நாட்டின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் பங்கேற்க வந்த ஹமாஸ் அமைப்பின் இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டார்.

இதற்கு பழிக்குப் பழி தீர்க்க இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்த ஈரான் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி உத்தரவிட்டுள்ளார்.

அவர், 'இஸ்மாயில் ஹனியே எங்களுடைய விருந்தாளி. அவரை இஸ்ரேல் கொன்றுவிட்டது. இஸ்ரேலை பழிவாங்குவதை நாங்கள் எங்கள் கடமையாகக் கருதுகிறோம்" என்றார்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே உயிரிழப்புக்கு இஸ்ரேல் தான் காரணம் என ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்காமல் இஸ்ரேல் மௌனம் காத்து வருகிறது.

இந்நிலையில், ஈரான் நேரடி தாக்குதலில் ஈடுபடும் என்ற அச்சத்தால், மத்தியக் கிழக்கு நாடுகளில் பதற்றம் நிலவுகிறது.

சுலவேசி

"கோழியா? முட்டையா?"

# வாக்குவாதத்தால் இளைஞர் கொலை



நபர் ஒருவர், "கோழியா? முட்டையா? எது முதலில் வந்தது" எனும் வாக்குவாதத்தால் தன் நண்பனையே கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, இந்தோனேஷியாவைச் சேர்ந்தவர் கதிர் மார்க்கஸ். இவரின் நண்பர் ஒருவர், கடந்த 24ஆம் திகதி மது விருந்தொன்றுக்கு இவரை அழைத்துள்ளார். அவரும் தனது நண்பர் அழைத்ததால் அங்கு சென்றிருக்கிறார்.

இதையடுத்து, இருவரும் தெற்கு சுலவேசியின் கரையோர பகுதியில் அமர்ந்து மது அருந்தியுள்ள நிலையில், அவரது நண்பர் "கோழி முதலில் வந்ததா இல்லை முட்டை முதலில் வந்ததா?" என்று மார்க்கஸிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து இருவருக்கும் இடையே இது குறித்த விவாதம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.


ஒருகட்டத்தில் விவாதம் முற்றி வாக்குவாதமாக மாற, "நான் இங்கிருந்து புறப்படுகின்றேன்" என்று மார்க்கஸ் சொல்ல, ஆத்திரமடைந்த அவரது நண்பர் கத்தியை எடுத்து சரமாரியாக அவரைக் குத்தியுள்ளார்.

இதனால் சம்பவ இடத்திலேயே மார்க்கஸ் துடிதுடித்து உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மார்க்கஸின் நண்பரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வொஷிங்டன்

கமலா ஹாரிஸ் பற்றி

# டிரம்ப் சர்ச்சை பேச்சு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க உள்ள கமலா ஹாரிஸ் இந்தியரா, கறுப்பரா என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல், நவ.5 இல் நடக்க உள்ளது.

இந்நிலையில், சிகாகோவில் நடந்த மாநாட்டில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட உள்ள முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேசுகையில், 'கமலா ஹாரிஸ் இந்திய பாரம்பரியத்தை மட்டுமே ஊக்குவித்து வந்தார். தற்போது அவர் தன்னை கறுப்பினத்தவராக அடையாளப்படுத்தி வருகிறார். இதனால், அவர் இந்தியரா? கறுப்பரா? என்பது தெரியவில்லை. தற்போது கமலா ஹாரிஸ் வெளிப்படையாக இல்லை" எனக் குறிப்பிட்டார்.

கமலா ஹாரிஸ் குறித்து டிரம்ப் பேசியதற்கு, வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன் பியர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: "ஒருவர் தன்னை எப்படி அடையாளப்படுத்துகிறார் என்பது குறித்து பேச யாருக்கும் உரிமை இல்லை. அது அவரது சொந்த முடிவு. கமலா ஹாரிஸ் மட்டுமே அவரது இனம் குறித்து பேச முடியும். கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதி என்பதால் அவருக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும்" என்றார்.

லக்னோ

இறக்கும் தருவாயிலிருந்த நதியை

# உயிர்ப்பித்த அதிகாரி



உ.பி.யில் சம்பய் மாவட்டத்தில் இறக்கும் நிலையில் இருந்த நதி ஐ.ஏ.எஸ். அதிகாரி முயற்சியால் சீரமைக்கப்பட்டது.

உ.பி. மாநிலம் சம்பய் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக சோட் என்ற நதி இருந்தது. கங்கை நதியின் துணை நதியாக இருந்த இது, அம்ரோஹா மாவட்டத்தில் துவங்கி 110 கி.மீ. தூரம் பயணித்து பதுவான் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது.

அம்மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், விவசாய தேவையை பூர்த்தி செய்வதாகவும் திகழ்ந்த இந்நதி, காலப்போக்கில் ஆக்கிரமிப்பு காரணமாகவும், அதனை ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாத காரணத்தினாலும் ஓடையை போல் சுருங்கி இறக்கும் தருவாயில் இருந்தது.

இந்நிலையில், விவசாயிகள் நிலத்தடி நீரை பயன்படுத்த ஆரம்பித்தனர். இதனால், நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றது. இதனிடையே, மணீஷ் பன்சால் என்பவர் அந்த மாவட்ட கலெக்டராக பொறுப்பேற்ற நிலையில், அவர் அந்த நதியை உயிர்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

முதல் கட்டமாக, நதியின் இயற்கையான நீரோட்டம் ஆய்வு செய்யப்பட்டது. இரண்டாவதாக, நதியின் நீளம், அகலம் பற்றி அறிந்து எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. 3ஆவதாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. 4ஆவதாக ஆற்றில் இருந்த மணல் அகற்றப்பட்டு, அது புதுப்பிக்கப்பட்டது.

ஆற்றை தூய்மைப்படுத்தி, ஆழப்படுத்த பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதன் காரணமாக, ஆற்றை புதுப்பிப்பதற்காக தொடங்கிய பணி 6 மாதங்களில் நிறைவு பெற்றது. இதன் காரணமாக, கடந்த பருவமழை காலத்தில் நிதியில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடி, அதன் பழைய நிலையை எட்டியது.

அப்பகுதியில் தண்ணீர் தேங்குவதும் தடைபட்டது. மேலும் நதிக்கரையோரம் எதிர்காலத்தில் மண்சரிவு ஏற்படாமல் இருக்க மூங்கில் மரக்கன்று நடப்பட்டன.

சிம்லா

காட்டாற்று வெள்ளத்தால்

# சரிந்து விழுந்த அடுக்குமாடி கட்டிடம்



இமாச்சலப் பிரதேசத்தின் குலுவில் அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்று ஆற்றில் இடிந்து விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் பல மாநிலங்களில் பருவமழை அதி பயங்கரமாக பெய்து வருகிறது. குறிப்பாக கேரளா, மகாராஷ்டிரா, புதுடெல்லி போன்ற மாநிலங்களில் மழை காரணமாக பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

இந்த சூழலில் இமாச்சல பிரதேச மாநிலம் சிம்லாவின் ராம்பூரில் புதன்கிழமை (31) அதிகாலை மேக வெடிப்பு ஏற்பட்டது. இந்த மேக வெடிப்பினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 20 பேர் மாயமாகி உள்ளனர்.

தகவல் அறிந்து பேரிடர் மீட்புக் குழு சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள நிலையில், துணை ஆணையர் மற்றும் காவல்துறை தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

வயநாடு

வயநாட்டுக்கு பெரும் தொகையை

# நிதியாக வழங்கிய சூர்யா குடும்பம்



வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவால் 270க்கும் மேற்பட்ட மக்கள் பலியான நிலையில், அங்கு நிவாரண பணிகளை மேற்கொள்ள சூர்யா, ஜோதிகா, கார்த்தி ஆகியோர் உதவி உள்ளனர்.

கேரளாவின் வயநாட்டில் கடந்த 30ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில், அங்குள்ள மூன்று கிராமங்கள் மண்ணுக்குள் புதைந்தன.

அந்த கிராமங்களில் வசித்த மக்கள் தற்போது ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியாகி உள்ள நிலையில், தோண்டத் தோண்ட பிணங்களாக வருவதால் வயநாடு முழுவதும் மரண ஓலம் கேட்கிறது.

இத்தகைய இயற்கை பேரிடரால் தத்தளித்து வரும் வயநாடு மக்களுக்கு இந்தியா முழுவதிலும் இருந்து உதவிகள் குவிந்த வண்ணம் உள்ளன. அரசியல்வாதிகளும், சினிமா பிரபலங்களும் நிவாரண நிதியை வழங்கி வருகின்றனர்.

இலங்கை எதிர் இந்தியா:

# இன்று ஆரம்பிக்கிறது ஒருநாள் தொடர்



இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில் வெள்ளையடிக்கப்பட்ட நிலையில் றோஹித் ஷர்மா, விராட் கோலியுடனான இந்திய அணிக்கு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் சவாலை வழங்குவதற்கு பாரியளவு முன்னேற்றத்தை இலங்கை காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக கடந்த காலங்களில் பிரகாசித்த ஜனித் லியனகே, சதீர சமரவிக்கிரம உள்ளிட்டோருடன் இணைந்து புதிய அணித்தலைவர் சரித் அசலங்க மத்திய வரிசையில் விக்கெட்டுகள் தொடர்ச்சியாக சரிவதை சரிசெய்ய வேண்டியுள்ளது.

மறுபக்கமாக அடுத்தாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தயார்படுத்தலை இந்தியா ஆரம்பிக்கின்ற நிலையில் சகலதுறைவீரராக ரியான் பராக்குக்கு அணியில் இடம் கிடைக்குமென்ற நிலையில் ஷ்ரேயாஸ் ஐயர், றிஷப் பண்ட், லோகேஷ் ராகுலுக்கிடையில் இரண்டு இடங்களுக்கான போட்டியிருக்குமெனக் கருதப்படுகிறது.

# தடகள போட்டியில் முதலிடம்

நடராசா கிருஸ்ணகுமார்





முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாந்தை கிழக்கு கோட்ட மட்ட தடகள விளையாட்டு போட்டி கடந்த ஜூலை (03) மற்றும் (04) வரை முல்லைத்தீவு பாலி நகர் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பாலிநகர் மகா வித்தியாலயம் அதிகூடிய புள்ளிகளை பெற்று கோட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளது.

பாலிநகர் மகா வித்தியாலயம் 274 புள்ளிகளையும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் 76 புள்ளிகளையும். வன்னிவிளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 56 புள்ளிகளையும் பெற்றன.

# மஹ்மூத் மாணவிகள் கௌரவிப்பு

நூருல் ஹுதா உமர்



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க போட்டிகள் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் ஜூலை (27 (28) (29) நடைபெற்றது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனானதுடன், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண மட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை தேசிய மட்ட போட்டிகளுக்கு ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தும் நோக்கில் மஹ்மூத் மகளிர் கல்லூரி சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு புதன்கிழமை, (31) கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

சதுரங்க வரலாற்று சாதனை படைத்த மஹ்மூத் மாணவிகள் கல்லூரி முன்றலில் பூ மாலை அணிவிக்கப்பட்டு இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டதுடன், வெற்றி பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் பெற்றோர்கள் முன்னிலையில் வழங்கி வைக்கப்பட்டதுடன், உடற்கல்வி பாட ஆசிரிய, ஆசிரியைகள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிக தங்கங்களை வென்றார் லெடக்கி



பெண்களுக்கான நீச்சல் ஒலிம்பிக்கில் அதிக தங்கப் பதக்கங்களை வென்றவராக ஐக்கிய அமெரிக்காவின் கேட்டி லெடக்கி மாறியுள்ளார்.

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் வியாழக்கிழமை (01) நடைபெற்ற பெண்களுக்கான 1,500 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சலில் தங்கப் பதக்கத்தை வென்றதன் மூலமே சக ஐக்கிய அமெரிக்காவின் ஜெனி தொம்ஸனின் 1992 தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான மூன்று ஒலிம்பிக்குகளின் அஞ்சலில் எட்டுத் தங்கப் பதக்கங்களை வென்றதை 27 வயதான லெடக்கி சமப்படுத்தியுள்ளார்.

பதக்கப் பட்டியலில் 9 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 8 தங்கம், 10 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் பிரான்ஸும் 8 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பானும், 7 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் அவுஸ்திரேலியாவும் காணப்படுகின்றன. 6 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் பெரிய பிரித்தானியா காணப்படுகின்றது.



# வெளியேறினார் நி ஸியாலியன்

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளின் பெண்களுக்கான தனிநபர் மேசைப்பந்தாட்டத்தின் மூன்றாவது சுற்றோடு 61 வயதான லக்ஸம்பேர்க்கின் முன்னாள் சீன வீராங்கனையான நி ஸியாலியன் வெளியேறியுள்ளார்.

புதன்கிழமை (31) நடைபெற்ற சீனாவின் சண் யிங்ஷாவுடனான மூன்றாவது சுற்றுப் போட்டியில் தோற்றே ஒலிம்பிக்கிலிருந்து நி ஸியாலியன் வெளியேறியுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு சண் யிங்ஷா தயாராகுவதற்கு நி ஸியாலியன் உதவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரிஸ் ஒலிம்பிக்கில் மேசைப்பந்தாட்டத்தில் கலந்து கொள்ளும் மிகவும் வயதானவர் நி ஸியாலியன் ஆவார்.சீனாவுக்காக 1983ஆம் ஆண்டு உலக சம்பியனான நி ஸியாலியன் 1980களின் இறுதியில் லக்ஸம்பேர்க்குச் சென்று பின்னர் 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் சீனாவைத் தவிர்த்து வேறு நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த விரும்பாதபோதும் பின்னர் தற்போது ஆறாவது ஒலிம்பிக்கில் லக்ஸம்பேர்க்குக்காக பங்கேற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 02, 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.